இனி இது ரகசியம் அல்ல!

அரசியல் காழ்ப்புணர்வுகள் ஆள்களை எப்படியெல்லாம் விமர்சிக்கத் தூண்டுகின்றன என்று நினைத்து வியந்தேன்.

முன்னாள் எம்.பி. சிவஞானம் சிறிதரனின் கடும் எதிர்ப்பாளர் ஒருவர் நேற்றுப் பகல் தொலைபேசி அழைப்பை பக்கம் 02 »

பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 07 வெள்ளிக்கிழமை 20.03.2020 கதிர் 135

# தேசியப் பட்டியலில் அம்பிகா முதலிடம்!



## சுமந்திரன் நேற்று அறிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 20

அம்பிகா சற்குணநாதன் எமது தேசியப்பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார். அம்பிகாவின் திறமை, ஆற்றல், துறை என்பவற்றை பார்க்கின்ற போது, அவரை யாழ்ப்பாணத்தில் போட்டியிட வைக்க இணங்கினோம். ஆனால், அவரால் போட்டியிட முடியாததால் தேசியப்பட்டியலில் அவரது பெயரை முதலாவதாகக் குறிப்பிட்டு வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளோம்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 03 »

## சாட்டிக் கடற்கரைக்கு செல்வதற்கும் தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணத்தின் சுற்றுலா மையங்களில் ஒன்றாக விளங்குகின்ற வேலணை – சாட்டி கடற்கரைக்குச் செல்வதற்கும் அங்கு ஒன்று கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேசசபைத் தவிசாளர் அறிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஒன்று பக்கம் 03 »

## ஞானசாரரின் வேட்புமனு நிராகரிப்பு!



கொழும்பு, மார்ச் 20

பொதுபல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரரின் தலைமையிலான 'அபே ஜன பல' கட்சியினால் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 3 சுயாதீனக் குழுக்கள் தாக்கல் செய்த வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## வன்னியில் டெனீஸ்வரனின் வேட்புமனுவும் நிராகரிப்பு!

### 37 தரப்புகளின் வேட்புமனுக்கள் ஏற்பு

வவுனியா, மார்ச் 20

வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் தலைமையிலான சுயேச்சைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு உட்பட 6 சுயேச்சைக் குழுக்களினதும் 2 அரசியல் கட்சிகளினதும் வேட்புமனுக்கள் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளன. பக்கம் 03 »

## பொதுத் தேர்தல் ஒத்திவைப்பு!

### மஹிந்த தேசப்பிரிய அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 20

பொதுத்தேர்தலை ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்த முடியாது. அதனால் அது ஒத்தி வைக்கப் பக்கம் 03 »

## யாழிலும் தேடுதல் நடக்கலாம்!

யாழ்ப்பாணம்,மார்ச்.20

கொரோனா பேரிடரை ஒட்டிய நடவடிக்கையாக வடக்கில் யாழ்ப்பாணத்திலும் எந்நேரத்திலும் படையினர் தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பிக்கலாம் என நேற்று சில வட்டாரங்களில் பேச்சடிபட்டது.

புத்தளம், சிலாபம் பகுதிகளில் ஊரடங்கை அறிவித்துப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் பக்கம் 03 »

## தனிமைப்படுத்தலில் இருந்து தப்பியோடுவோர் துரோகிகள்!

### மஹிந்த அமரவீர காட்டம்

கொழும்பு, மார்ச் 20

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து, தங்களை தடுப்பு முகாமுக்கு அனுப்பவேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் செய்வோர், தனிமைப்படுத்தும் மையங்களிலிருந்துதப்பியோடுவோர் அனைவரும், தேசத் துரோகிகளாக கருதப்படவேண்டும் என போக்குவரத்து சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு, அவர்களே காரணம் என்றும் பக்கம் 03 »

## ஜாஎல, வத்தளை பகுதிகளிலும் பொலிஸ் ஊடரங்கு அமுலுக்கு

கொழும்பு, மார்ச் 20

ஜாஎல, வத்தளை பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் ஊரடங்கு நடைமுறைக்கு வந்தது.

கம்பஹா மாவட்டம் ஜாஎல மற்றும் வத்தளை பொலிஸ் பிரிவுகளில் நேற்று வியாழக்கிழமை இரவு 10 மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 03 »

## அவசரகால நிலைமை ஏற்படும் சூழலில் நாடாளுமன்றைக் கூட்டக் கோருவோம்

### – கூறுகின்றது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர கால நிலைமை காரணமாக நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டிய தேவை ஏற்படுமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு அரசிடம் கோரும்.

– இவ்வாறு தெரிவித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், மீண்டும் நாடாளுமன்றத்தை கூட்டுமாறு இது பக்கம் 03 »

## தனிமைப்படுத்தப்படும் முந்தல் பொலிஸார்!

பொது சுகாதார பரிசோதகர்கள் முந்தல் பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றும்பொலிஸாரையும் அதிகாரிகளையும் தனிமைப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

விபத்துக் காரணமாகமுந்தல்பொலிஸ் நிலையத்தினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கோவிட் – 19 பக்கம் 03 »

## மொட்டு தேசியப் பட்டியலில் முன்னாள் ஆளுநர் ராகவனும்



கொழும்பு, மார்ச் 20

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் பக்கம் 03 »

## கொரோனா பாதிப்பு 59!

### நாளுக்கு நாள் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3 பேர் நேற்று வியாழக்கிழமை மாலை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமட்டும்7பேர்கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் இலங்கையில் கோரோனா வைரஸ் தொற்றால் பக்கம் 03 »

## பிரதேச சபை உறுப்பினருக்கும் கொரோனா!

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் உள்ளடங்குகிறார்.

பொதுஜன பெரமுன சார்பில் வரக்காப்பொல பிரதேசசபையில் தெரிவான ஒருவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, பக்கம் 03 »

# திருமண, குடும்ப நிகழ்வுகளை நடத்தவும் புதிய கட்டுப்பாடுகள்

மக்கள் ஒன்று கூடுவதால் கொரோனா வைரஸ்ஸின் பரம்பல் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டதை தொடர்ந்து தேசிய அளவில் மக்கள் ஒன்று கூடல்களை முற்றாக தவிர்க்குமாறு அறிவுறுத்தபட்டிருக்கின்ற அதேவேளை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா நோய் தொற்று தொடர்பாக வடமாகண ஆளுநர் செயலகம் பின்வரும் விடயங்கள் தொடர்பிலான ஆலோசனைகளை பொது மக்களின் கவனத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது.

★ திருமண வைபவங்கள் மற்றும் குடும்ப நிகழ்வுகளை நடாத்துவதாயின் அவர்களின் பிரிவிற்கு பொறுப்பான பொது சுகாதார வைத்திய அதிகாரிக்கு முன்னறிவித்தல் வழங்கி அவர்களின் ஆலோசனைகளை அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொள்ளல்.

★ மக்களின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்து குறைந்த எண்ணிக்கையானவர்களுடன் நிகழ்வுகளை நடத்துவதனையும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதனையும் இவற்றிற்கு ஏற்பாடு செய்பவர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்

★ தேசிய அளவிலான ஏற்பாடுகளுக்கிணங்க அடுத்துவரும் இரு வார காலபகுதிக்கு ஆலயங்களில் நடைபெறும் அன்னதான வைபவங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் சமய வைபவங்கள் எதனையும் மேற்கொள்ளாது

இயன்றவரை தவிர்ப்பதை ஆலய நிர்வாக சபையினர் உறுதிபடுத்திகொள்ளல்.

இக்கால பகுதிகளில் ஆலயங்களில் வருடாந்த திருவிழா மற்றும் முக்கிய சமய நிகழ்வுகள் எதனையும் நடாத்த வேண்டி இருப்பின் அதுகுறித்து பொது சுகாதார வைத்திய அதிகாரி, கிராம சேவகர் மற்றும் உரிய பிரிவுக்கு பொறுப்புடைய பொலிஸ் அதிகாரியுடன் தொடர்புகொண்டு ஆலோசனை பெற்று அதற்கமைவாக இதனை மேற்கொள்ளல். அவசியம் ஏற்படின் மிகவும் குறைந்த எண்ணிக்கையான மக்களுடன் இச்சமய நிகழ்வுகளை

மேற்கொள்வதனை ஆலய நிர்வாக சபையினர் கவனித்தல்.

– இவை போன்றவற்றை கொரோனா அச்சுறுத்தல் நீடிக்கும் வரை இயன்றவரை கடைப்பிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் நோய் தீவிரத்தன்மையை எல்லோரும் நன்கறிந்து,

வடமாகாணத்தினையும் பாதுகாக்க அதாவது வருமுன் காக்க எல்லோரும் பொறுப்புணர்வுடனும், சுய ஒழுக்கத்துடனும் சூழ்நிலைக்கேற்ப ஆரோக்கியமான தற்பாதுகாப்பு பழக்க வழக்கங்களுடனும், சமூகப் பொறுப்புடைய நடைமுறைகளுடனும் நடந்துகொள்ள வேண்டும் எனவும் வடமாகாண ஆளுநர் செயலகம் அனைவருக்கும் அறிவுறுத்தியுள்ளது.

# நாட்டில் தானமாக இரத்தம் பெற்றுக்கொள்வதில் சிக்கல்



நாட்டில் நிலவும் சூழ்நிலையின் அடிப்படையில் இரத்தத்தைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தேசிய இரத்தமாற்ற சேவையின் பணிப்பாளர் வைத்தியர் லக்ஷமன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் இரத்த தானம் செய்யும் நபர்களுக்காக விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த இலக்கத்திற்கு அழைப்பு விடுத்து தங்களுக்கு வழங்கப்படும் நேரத்தின் அடிப்படையில் இரத்த தானம் செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான குளிரூட்டப்பட்ட ரயில் சேவை நிறுத்தம்



யாழ்.காங்கேசன்துறை – கொழும்பு இடையில் சேவையில் ஈடுபடும் குளிரூட்டப்பட்ட ரயில் சேவை இன்று தொடக்கம் மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த ரயில் கல்கிசையில் இருந்து அதிகாலையில் 5.10 க்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து மதியம் 1.45 க்கும் சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்தார். நான் எதிர்பார்த்த அழைப்பாக அது இருந்தது.

கடந்தமாத இறுதியில் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் பங்குபற்றச் சென்று திரும்பியிருந்தார் சிறிதரன். வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களை முன்னெச்சரிக்கையாக மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளும்படி அரசு பரிந்துரைத்திருந்தது. அதனடிப்படையில் அவர் பரிசோதனைக்குச் சென்றிருப்பார் போலும்.

அவ்வளவும் போதாதா என் போன்ற பத்திரிகையாளர்களுக்கு...? எங்களுக்கு ஓர் ஈர் கிடைத்தால் போதும். ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கும் தந்திரோபாயம் தெரிந்தவர்கள் நாங்கள்.

அப்படி ஒரு பத்திரிகைப் பிரகிருதியின் கைகளில் சிறிதரன் மருத்துவ பரிசோதனைக்கு ஆஸ்பத்திரிக்குச் சென்ற செய்தி – தகவல் – கிடைத்து விட்டது போலும். அவரைக் கொரோனாத் தொற்று நோயாளி போல அர்த்தம் கற்பிக்கும் செய்திகள் சிறகடித்துப் பறக்கும் வேலையை அந்த ஊடகவியலாளர் தமது குசும்புத்தனத்தால் பண்ணி விட்டார் என்று நினைக்கிறேன்.

சிறிதரனின் கடும் எதிர்ப்பாளரான எனது அந்த நண்பர் தொலைபேசி அழைப்பு எடுத்த போது, இப்படி ஒரு செய்தி பரவிய மகிழ்ச்சியில் தொலைபேசி எடுக்கிறார் என்று நினைத்தேன்.

*“அண்ணே... செய்தி பார்த்தனீங்களே...?”* – என்றார் எடுத்த எடுப்பிலேயே.

நான் உண்மைநிலைமையை அவருக்குத் தெளிவுபடுத்தி, விளங்கப்படுத்த முயன்றேன்.

ஆனால் அவர் என்னை முந்திக் கொண்டு பதிலளிக்க முற்பட்டார். சிறிதரனுக்கு கொரோனா நோய்த் தொற்றே வராது என்ற சாரப்பட அவரது பதில் இருந்தது.

*“ஏன் அப்படிக் கூறிகின்றீர்கள்?”* – என்ற பாணியில் நான் கேள்வி எழுப்பினேன்.

நையாண்டித்தனமாக அவர் அளித்த பதிலைக் கேட்டு நான் மலைத்துப் போனேன்.

*“அது நடக்காது அண்ணே. அவருக்குக் கொரோனா தொற்றாது. அதை நான் அடித்துக் கூறுவேன். எங்காவது வைரஸுக்கு வைரஸ் தொற்று ஏற்படுமா?”* – என்றார் அவர் பட்டவர்த்தனமாக.

நான் ஒரேயடியாக மலைத்து, விக்கித்துப் போனேன்.

அரசியல் எவர், எவரை எல்லாம் எப்படி, எப்படி எல்லாம் பேசப் பண்ணுகின்றது என்று எண்ணினேன்.

அதேசமயம், எனது தொலைபேசியில் வைபருக்கு ஒரு படம் வந்தது. அனுப்பியவர் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றின் பிரமுகர்.

அவரது கூட்டமைப்பு சார்பில் தேர்தலில் போட்டியிடும் ஒருவரின் பிரசாரத்துக்கான துண்டுப் பிரசுரம் போன்று அது இருந்தது.

*“நான்கு தசாப்தங்களாக தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் ‘ஊடகப் போராளி’யை ஆதரிப்போம்!”* – என்று அதில் இருந்தது.

அந்த வைபர் செய்தியை அனுப்பிய அந்தப் பிரமுகர் அழைப்பில் வந்தார்.

*‘‘உவர், ‘ஊடகப் போராளியோ?’ அல்லது ‘ஊடக முதலாளியோ’...?”* – அவர் சீற்றத்துடன் கேட்டார். நான் பதிலுக்கு சிரித்து வைத்தேன்.

*“ஊடகத்திலை தமிழிலை ஒரு வசனம் உருப்படியா எழுதியிருப்பாரோ...? ‘ஊடக முதலாளி’ எண்டால் ‘ஊடகப் போராளி’ எண்டு சொல்லலாமோ...?”* – என்று கேட்டார் அவர்.

*‘‘உவர் பேப்பர் பிஸ்னஸ் தொடங்கியே முப்பத்தியைந்து வருஷமும் ஆகவில்லை. அதுக்குள்ள நான்கு தசாப்தம் பற்றிப் பேசத் தொடங்கிட்டார். புலி இருக்கும் வரை வாய் துறக்காமல் தானுண்டு, தன்ரை பிஸ்னஸுண்டு என்று அம்சடக்காக இருந்தவர். அரசியல் பக்கமே தலைவைக்காதவர்... யுத்த காலத்திலை பேப்பரிலை வந்த செய்திக்கு, ஒரு வசனத்துக்குப் பொறுப்பெடுத்துக் கழுத்துக் கொடுக்காதவர். ஒரு வசனம் செய்தி எழுதாதவர். இப்ப...‘ஊடகப் போராளி’ எண்டு நாடகமாடி மக்களின் காதிலை பூச்சுற்றுகின்றார். உண்மையிலை இப்ப அவர் ஊடகத்தைத் தன்ரை அரசியலுக்கு வளைந்தாடப் பண்ணிறதைப் பார்த்தால் அவரை ‘ஊடகக் கூத்தாடி’ எண்டுதான் சொல்ல வேணும்.”* – அந்தப் பிரமுகரின் கோபம் குறைந்தபாடாயில்லை.

கடைசியிலை அவரின் குடைச்சல் என் பக்கம் திரும்பியது.

*“இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானை பெரியவிருது வழங்கி, கௌரவித்துப் பாராட்டினார்கள். முடிவில் அவர் ஒரு வசனம் கூறினார். ‘எல்லாப் புகழும் இறைவனுக்கே!’ என்றார் அவர். இப்ப... நீங்கள் ஒரு மூத்த ஊடகவியலாளர். யார் யாரோ எல்லாம் ‘ஊடகப் போராளி’ பட்டத்துக்கு உரிமை கோருவதற்கான புகழ் எல்லாம் உங்களைப் போன்ற பல ஊடகப் போராளிகளின் இரத்தத்திலும், உழைப்பிலும்தான் உறிஞ்சப்பட்டு கட்டமைக்கபட்டு உருவானது. ஆகவே – அந்த ‘எல்லாப் புகழும் உங்களுக்கே’ எண்டுதான் சொல்ல வேண்டும்”* – என்றார் அவர்.

நான் சிரித்தேன்.

*“இல்லை. இல்லை. அந்த ‘ஊடகப் போராளி’ சான்றிதழை அவருக்கு ஒப்பமிட்டு உறுதிப்படுத்துவது போல, அந்த ஊடகத்தின் பெயரில் அதன் முதலாளிக்கு வேட்பாளர் நியமனம் கொடுத்த மாவைக்குத்தான் அந்தப் புகழ் எல்லாம்.... ஒரிஜினல் ஊடக முதலாளியை, ஊடகப் போராளியாய் எங்கள் தலையில் மிளகாய் அரைப்பதற்கு வழி வகுத்தவர் அவர்தான்...!”* – என்று முடித்தேன் நான்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

யுத்தத்துக்கு மத்தியில் அளப்பரும் பணியாற்றிய ஓர் ஊடகத்தை, அரசியல் கோமாளித்தனத்துக்கும், சுயநல அரசியலுக்கும் வளைந்து கொடுக்கும் கேவலமாக்கியவர்கள் என்ற வரலாற்றுக் குற்றப்பொறுப்பில் இருந்து மாவையரும் கூடத் தப்ப முடியாது என்பதுதான் என் கருத்து...!

– மின்னல் –

# நாகர்கோவில் கடற்தொழிலாளியின் வெளியிணைப்பு இயந்திரம் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்.20

வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் பகுதியில் கடற்தொழில் செய்யும் தொழிலாளி ஒருவருடைய படகின் வெளியிணைப்பு இயந்திரம் களவாடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடற்தொழிலுக்கு செல்வதற்காக இன்று(நேற்று) வியாழக்கிழமை காலை கடற்கரைக்கு சென்றபோது எனது படகில் பொருத்தப்பட்டிருந்த வெளியிணைப்பு இயந்திரம் கலவாடப்பட்டதை அறிந்து கொண்டேன்.

பொருளாதார வசதிகளின்றி கஷ்டத்திற்கு மத்தியில் வாழும் நான், வெளியிணைப்பு இயந்திரத்தினை தெரிந்தவர் ஒருவரிடமிருந்து பெற்றே தொழில் செய்து வந்தேன். அந்த இயந்திரமே களவாடப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்டார் எனும் சந்தேகத்தில் தேடப்பட்டு வரும் பிரதான சந்தேக நபரான ஜங்கரன் என்பவர் நேற்று முன் தினம் புதன் கிழமை நாகர் கோவில் கடற்கரை பகுதியில் நடமாடுவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், இராணுவத்தினர் அவ்விடத்திற்கு வந்திருந்தனர்.

இராணுவத்தினரின் வருகையை அறிந்த அவர் படகில் கடலுக்குத் தப்பிச் சென்றுள்ளார். இதனால் ஆத்திரமுற்ற இராணுவத்தினர் அப்பகுதியில் நின்ற கடற்தொழிலாளர்கள் மற்றும் மக்கள் மீது தாக்குதல் நடாத்தினர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் தாக்குதல் காரணமாக கடற்கரையில் நின்ற மக்கள் அங்கிருந்து தப்பியோடியதால், நேற்று முன் தினம் இரவு அவ்விடத்தில் மக்கள் நடமாட்டம் காணப்படவில்லை.

இந்நிலையில் இந்தக் கடற்தொழிலாளியின் படகின் வெளியிணைப்பு இயந்திரம் களவாடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருகோணமலையில் நேற்று 13 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

திருமலை,மார்ச்20

திருகோணமலை மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட 16 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடம் இருந்தும் 24 சுயேச்சைக் குழுக்களிடமிருந்தும் மொத்தமாக 40 வேட்புமனுக்கள் கிடைக்கப் பெற்றன. அதில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் 3 வேட்புமனுக்கள் மற்றும் 10 சுயேச்சைக் குழுக்களது வேட்புமனுக்கள் அடங்கலாக 13 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சிங்கள தீப ஜாதிக பெரமுன, தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகளது வேட்புமனுக்களே நிராகரிக்கப்பட்டுள்ளன.

1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தினுடைய 15ஆவது பிரிவுக்கு அமைய கையளிக்கப்படாத வேட்புமனுக்களே நிராகரிக்கப்பட்டுள்ளன எனக் கிழக்கு மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளரும் திருகோணமலை மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

அதன்படி இம்முறை நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 27 அரசியல் குழுக்களது 189 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் நாடாளுமன்றத்திற்கு நான்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். (ஐ)

## தேசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு ஏற்க னவே குலநாயகம், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, குருகுலராஜா ஆகியோரின்பெயர் கள் உள்ளடக்கப்பட்டுள்ள நிலை யில் – திருகோணமலையில் போட்டியிடும் குகதாசனுக்கு தேசியப்பட்டியல் இடம் வழங்க வேண்டும் என சம்பந்தன் உறுதி யளித்துள்ள சூழ் நிலையில் – சுமந்திரன் நேற்று இவ்வாறு கூறி னார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில் –

பங்காளிக்கட்சிகளுடன் ஆச னங்களை பங்கிடுவதென ஆரம் பத்திலேயே முடிவிற்கு வந்திருந் தோம். அதன் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் நிய மனக் குழுவொன்றை நியமித்தி ருந்தது. அந்தக் குழுவின் கூட்டம் 3 முறை கூடியது.

அதில் கூடிய 15 பேரின் முடி வாகவே வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. சாதாரண மாக எல்லா ஜனநாயகக் கட்சிக ளுக்குள் இருப்பதை போல பல வித கருத்துக்கள் இருந்தாலும் இறுதியில் அனைவரின் சம்மதத் துடன் ஏகோபித்த முடிவாக எடுக் கப்பட்டது. தனிநபர்களின் முடி வாக அதை காண்பிப்பது தவறு. அந்த முடிவை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெண் வேட்பாளர் சம்பந்த மாகவும் சர்ச்சை ஏற்பட்டது. பெண்கள் தேர்தலில் நிறுத்தப் பட வேண்டுமென்பது எமது நீண்டகாலக் கருத்து. நிறுத்தப் படும் பெண்கள் வெற்றி பெறக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். சசிகலா, அம்பிகா யாழ். மாவட்டத்திலும், மட்டக்களப் பில் நளினியின் பெயரையும் நியமனக்குழு ஏற்றுக்கொண்டி ருந்தது. மட்டக்களப்பில் நாங்கள் ஏற்றுக்கொண்டவர்களின் எண் ணிக்கை, போட்டி போடுபவர்க ளின் எண்ணிக்கையைவிட அதி கமாக இருந்தது.

முடிவுகள் எடுக்கப்படாது உத்தியோகபூர்வமாக வெளியாக முன்னர் செய்திகள் கசிந்தமை துரதிஷ்டமான விடயம். நியமனக் குழுவில் இருந்தவர்கள் அதைச் சொல்லியிருக்கக்கூடாது.

மட்டக்களப்பு பெண் வேட்பா ளர் நளினி ரட்ணராஜாவை குறி வைத்து மோசமான கீழ்த்தர மான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. பெண்கள் ஏன் அரசியலுக்கு வருவதில்லை யென்பதற்கு இது உதாரணமா கியது. அம்பிகா, சசிகலா பற்றியும் விமர்சிக்கப்பட்டது. ஆணாதிக்க சமூகத்தில் பெண்களை உற் சாகப்படுத்தி, அவர்களை அரசி யலுக்கு வரவழைக்கவேண்டிய சூழலில் இப்படி நிகழ்ந்தமைக்கு அவர்களிடம் மன்னிப்பு கோரவும் தயாராக இருக்கிறோம்.

அம்பிகா இறுதிநேரத்தில் சொந்த காரணங்களுக்காக யாழ்ப்பாணத்தில் போட்டியிட முடி யாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார். அதைகூட, அவ ரைக் கட்சி நீக்கியதாகவும், எதிர்ப் புக்கள் காரணமாக அவரைச் சேர்க்கவில்லையென்றும் செய்தி கள் வெளியிடப்பட்டன. அது அவரது தனிப்பட்ட முடிவு. போட் டியிடுவது சாத்தியமில்லையென் பதால் அவர் பட்டியலில் இணைக் கப்படவில்லை. அம்பிகா எமது தேசியப்பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார். அம்பிகாவின் திறமை, ஆற்றல், துறை என்ப வற்றை பார்க்கிறபோது, அவரை யாழில் போட்டியிட இணங்கி னோம். ஆனால், அவரால் போட்டியிட முடியாததால் அவரைத் தேசியப்பட்டியலில் முதலாவதாக குறிப்பிட்டு வேட்புமனுவை தாக் கல் செய்துள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் போட்டியி டும் இருவருக்கு எதிராக சிலர் போராட்டம் நடத்தியிருந்தனர். அந்த போராட்டத்தை மகளிர் அணி நடத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அது தவறு. மகளிர் அணி, கட்சி நியமிக்கும் வேட்பாளர்களைத்தாங்கள் ஆதரிப்பார்கள் என்றும், போராட் டம் நடத்தியவர்கள் தன்னிச்சை யாக நடத்தனர் எனவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மதனி கையொப் பமிட்டுள்ளார்.

வேட்பாளருக்கு விண்ணப் பித்த சிலர்தான் இந்த போராட் டத்தை நடத்தினார்கள். பெண்க ளின் அரசியல் பிரவேசத்திற்கு எதிரான இந்த போராட்டம் துரதி ஷ்டவசமானது – என்றார். (ஐ-07)

## தனிமைப்படுத்தப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

8 ஆம் திகதி மதுரங்குளி பகுதியில் விபத்து சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இதன்போது ஜா – எலவில் வசிக்கும் நபர் முந்தல் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். இவர் அண்மையில் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு வந்த சந்தேக நபர் ஆவார்.

சந்தேகநபர் புத்தளம் நீதி வான் அப்துல் காதர் முன்னி லையில் ஆஜர்படுத்தப்பட்டு இந்த மாதம் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட் டார்.

சிறையில் இருந்து விடுவிக்கப் பட்ட சந்தேக நபர் பின்னர் நோய் வாய்ப்பட்டார். அவர் கோவிட் – 19 வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதன்படி, சந்தேக நபரைக் காவலில் வைத்திருந்த முந்தல் பொலிஸ் அதிகாரிகள் நேற்று மாலை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படத் தொடங்கியுள் ளனர்.

அவர் ஆஜர்படுத்தப்பட்ட சிறை அறை தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் கூறுகின்றனர்

## ஜாஎல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் ஊடகப் பிரிவு இந்த அறிவித்தலை வழங்கியுள்ளது.

புத்தளம், சிலாபம் மாவட்டங் கள் மற்றும் கொச்சிக்கடை (நீர்கொழும்பு) பொலிஸ் பிரிவு களில் நேற்றுப் பிற்பகல் 2 மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் ஜாஎல, வத்தளை பொலிஸ் பிரி வுகளிலும் ஊரடங்கு நடை முறைப்பத்தப்பட்டுள்ளது.

நாட்டில் முன்னெடுக்கப்படும் கொரோனா பரவலைக் கட்டுப் படுத்தப்படும் தேசிய திட்டத்தின் கீழ் இந்த ஊரடங்கு நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## சாட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடவேண்டாம் என்றும் தேவை ஏற்படின் ஒரு சிலர் வெளியே வந்து அத்தியாவசிய தேவை களை நிறைவேற்றிக் கொள்ளு மாறும், அவர் கூறியுள்ளார்.

மக்களின் நன்மை கருதி, அர சின் இந்தத் தடுப்பு நடவடிக்கைக் களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் பொதுமக்களின் நன்மை கருதி யும் தற்காலிகமாக சாட்டி கடற்க ரைக்கு வருவதையும் ஒன்று கூடு வதையும் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 59ஆக (ஜனவரியில் பாதிக்கப் பட்ட சீனப் பெண்ணுடன் 60பேர்) அதிகரித்துள்ளது.

நாட்டில் கோரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 243 பேர் வைத்தியசாலைகளில் கண் காணிக்கப்படுகின்றனர்.

அத்துடன், மட்டக்களப்பு, வவு னியா உள்ளிட்ட 14 தனிமைப் படுத்தல் நிலையங்களில் 2 ஆயிரத்து 300 பேர்வரை தங்க வைத்துக் கண்காணிக்கப்படு கின்றனர். (ஐ)

## மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராகவனின் பெயரும் உள்ள டக்கப்பட்டுள்ளது.

பிரதான அரசியல் கட்சிக ளின் தேசியப் பட்டியல் உறுப்பி னர்கள் விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

அதன்படி, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசியப்பட்டி யலில், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கெவிந்து குமரதுங்க, பேராசிரி யர் ரோஹண லக்ஷ்மன் பியதாச, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, அலி சப்ரி, அஜித் நிவார்ட் கப்ரால், சுரேன் ராகவன், திலகரத்ன டில்ஷான், டாக்டர் சரிதா ஹெரத், டிரான் அலெஸ், ஜயந்த கோட்ட கொட மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்க ளாக திஸ்ஸ அத்தநாயக்க, ஹரின் பெர்னாண்டோ, இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், குணரத்ன வன்னிநாயகே, மயந்த திசா நாயக்க, ஷிரால் லக்திலக, சமீர பெரேரா, ஏரல் குணசேகர, எரான் விக்ரமரத்ன மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் பெய ரிடப்பட்டுள்ளனர். (ஐ)

## தனிமைப்படுத்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் குற்றஞ்சாட்டினார்.

பெற்றோலிய வளங்கள் அபி விருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர், ஊடக வியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை அரசு எடுக் கும் என்றும் நாட்டின் தற்போ தைய நிலைக்கு, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டோரே பொறுப்புக் கூறவேண்டும் என் றும் அவர் கூறினார்.

முப்படையினர், சுகாதார சேவையினரின் அர்ப்பணிப்பைப் பாராட்டிய அவர், மற்றைய நாடு களுடன் ஒப்பிடும்போது நம் நாட்டிலுள்ள முப்படையினரும் சுகாதார சேவைகளுமே மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரி வித்தார். (ஐ)

# சில இறக்குமதிகள் நிறுத்தம்

அனைத்து வகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்வதை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி நடவடிக்கையை மூன்று மாதங் களுக்கு இடைநிறுத்துமாறு அனைத்து வங்கிகளுக்கும் மத் திய வங்கி உத்தரவிட்டுள்ளது.

## யாழிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது தெரிந்ததே.

அண்மையில் வெளிநாடு களில் இருந்து நாடு திரும்பிய சிலர் அந்தப் பகுதியில் படையி னர் நடத்திய தேடுதலுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு வடக்கே யாழ்ப் பாணத்தை ஒட்டிய ஒரு பிரதேசத் தில் தங்கியிருக்கின்றனர் என்ற சந்தேகம் அதிகாரிகள் தரப்புக்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதையொட்டி யாழ்ப்பாணத் தில் சில சமயத்தில் எந்நேரத்தி லும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடக்கலாம் எனத் தெரிவிக்கப் பட்டது.

## பிரதேச சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டி ருந்த இராணுவச் சிப்பாய் ஒரு வரும் கொரோனா தொற்றிற்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வரு கிறார்.

இவர்களை விட இந்தியர் ஒருவரும், பிரான்ஸ் பிரஜை ஒரு வரும் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார் கள். (ஐ)

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை அரசிடம் கூட்டமைப்பு கோரவில்லை என்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கை யில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர கால நிலையினைக் கருத்தில் கொண்டு தேர்தல் பிற்போடப் பட்டுள்ளது. இதற்கான தேர்தல் கள் அலுவலகத்துக்கு நன்றி கூறுகின்றோம். நாட்டின் நிலைமை சுமுகமடைந்த பின்னர் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இதற்கிடையில் தேவை ஏற் படின் நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படவேண்டும். நாடாளும ன்றத்தை மீண்டும் கூட்டுவதற் குச் சட்டத்தில் இடமுண்டு. குறிப்பாக ஜனாதிபதி தனக்கு உள்ள அதி காரத்தை பயன்படுத்தி அரச மைப்பின் 9 ஆவது உறுப்புரிமை யின்படி கலைக்கப்பட்ட நாடாளு மன்றத்தை மீண்டும் கூட்டுவதற் கான தேவை ஏற்படின் கூட்டலாம்.

இன்று ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையை சமாளிப்பதற்கான ஆலோசனைகளை, நடவடிக்கை களை நாடாளுமன்றத்தைக் கூட்டி அதன் ஊடாக மேற் கொள்ளலாம். இதற்கு அனை வருடைய ஒத்துழைப்பும் தேவை.

இருப்பினும் இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் நாடாளுமன்றத்தை கூட்டுமாறு கேட்கவில்லை. ஆனாலும் தொடர்ந்து நிலைமையை அவ தானிப்போம். கட்சித் தலைவர் களுக்கான கூட்டம் ஒன்று கூட் டப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந் தது.

இருப்பினும் அந்தக் கூட்டம் இன்னும் கூட்டப்படவில்லை. அவ்வாறான ஒரு கூட்டம் கூட்டப் பட்டால் கூட்டமைப்பும் அதில் கலந்து கொண்டு தேவை ஏற் படின் கலைக்கப்பட்ட நாடாளு மன்றம் மீண்டும் கூட்டப்படவேண் டும் என்ற கோரிக்கையை முன் வைக்கும் – என்றார். (ஐ-07)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், வன்னி தேர் தல் தொகுதியில் 45 வேட்பு மனுக்கள் ஏற்றுகொள்ளப்பட் டுள்ளன எனவும் 8 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளனவும் வவு னியா மாவட்ட அரச அதிபரும் தெரிவித்தாட்சி அலுவலருமான சமன் பந்துலசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக் கான வேட்புமனு தாக்கல் நேற்று 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில் கட்சிப் பிரதிநிதிகளு டனான கலந்துரையாடல் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, வன்னி தேர்தல் தொகுதியில் வேட்புமனுவைத் தாக்கல் செய்த 34 சுயேச்சைக் குழுக்களில் 6 சுயேச்சைக் குழுக் களின் வேட்புமனுக்களும் மௌ விம ஜனதா பெரமுன மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன் னணி ஆகிய இரு கட்சிகளின் வேட்புமனுக்களும் தேர்தல் திணைக்களத்தால் நிராகரிக் கப்பட்டுள்ளன.

இந்த வேட்புமனுக்கள் 1981 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கமைவாக சமர் பிக்கப்படாமையினால் அவை நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக் களுக்கான கட்டுப்பணம் மீள வழங்கப்படும் எனவும் சமன் பந்துலசேன தெரிவித்தார். (ஐ)

## பொதுத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித் தார்.

கொரோனா வைரஸை தடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள செயலணியின் ஆலோசனை யின் அடிப்படையில், பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள தினம் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 14 நாட்கள் செல்லும் வரை தேர்தல் நடைபெறும் தினத்தை அறிவிக்க முடியாது என்றும் தேர்தல் ஆணைக்குழு வின் தலைவர் குறிப்பிட்டார்.

தேர்தல் ஒத்திவைக்கப்படு வது எவரது தேவையின் அடிப்படையிலும் அல்ல என்றும் முழுமையாக வைரஸின் காரண மாகவே தேர்தலை ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

வேட்பு மனுக்கள் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையில் நிராக ரிக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

2000 ரூபா பணத்தில் நாடா ளுமன்ற உறுப்பினராக நாடாளு மன்றத்துக்கு செல்வதற்கு முடி யும் என்று சில வேட்பாளர்கள் சிந்தித்தபோதிலும் ஆகக்குறைந்த வகையில் ஒரு மாவட்டத்துக்காக 5 சதவீத வாக்கு வீதம் பெற் றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினார்.

சில மாவட்டங்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட வேட்புமனுக் கள் கிடைத்திருப்பதாகவும் தேர் தல் ஆணைக்குழுவின் தலை வர் மேலும் குறிப்பிட்டார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேர்தல் ஆணையத்தின் அதிகாரம்

எதிர்பார்க்கப்பட்டபடி நேற்றுப் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை பூர்த்தியானமையை அடுத்துத் தேர்தல் தள்ளிப் போகும் அறிவிப்பைத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோடிகாட்டியிருக்கின்றார்.

எனினும் தேர்தல் எத்தனை நாள் தள்ளிப் போகும், புதிய தேர்தல் திகதி எது, அதுவரையான பிரசார நடைமுறைகள் யாது, தேர்தல் சட்டங்கள் எதுவரை நீளும் என்பவைப் பற்றி எல்லாம் தெளிவான பதில் ஏதும் இன்னும் இல்லை.

இனித் தேர்தல் எப்போது என்பது தொடர்பில் ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாகப் பேசுகின்றார்கள்.

இவ்விடயத்தில் சுயாதீனத் தேர்தல் ஆணையத்துக்கு உள்ள உரிமைகள், சட்டக் கடப்பாடுகள், அதிகாரங்கள் தொடர்பில் ஒவ்வொருவர், ஒவ்வொரு விதமாகக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் பூர்த்தியாகி ஐந்து முதல் ஏழு வார காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது பொதுவான நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான சட்ட விதியாகும்.

மார்ச் 19ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் முடிந்து ஐந்தாவது வாரத்தில் வருகின்ற சனிக்கிழமையில் – ஏப்ரல் 25ஆம் திகதி – பொதுத் தேர்தலுக்கான நாள் முன்னர் குறிக்கப்பட்டிருந்தது.

அந்த ஐந்து வார அளவை ஏழு வாரங்ககளாக்கி – மே 2ஆம் திகதி அல்லது 9ஆம் திகதி – சனியன்று தேர்தல் நடைபெறலாம் என சில தரப்புகள் ஊகம் தெரிவிக்கின்றன. ஆனால் அந்த ஊகம் தவறு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

மே 2 ஆம் திகதி என்பது ஆக ஒரு வாரம் தள்ளிப் போகும் கால அளவீடு. அது போதுமானதாக இருக்கப் போவதில்லை.

மறுபுறத்தில் மே 9ஆம் திகதி வெசாக் விடுமுறை காலத்தை ஒட்டியது. எனவே அதுவும் சாத்தியப்படாது. பொருத்தமேயற்றது.

அதன் பின்னர் மே மூன்றாம் வாரத்தை ஒட்டி இஸ்லாமியர்களின் நோன்புப் பெருநாள் இறுதி தினங்களை ஒட்டியது. ஆகையால் அதுவும் பொருந்தி வரப் போவதில்லை.

இறுதியில், வெசாக் விடுமுறைக்கும், நோன்புப் பெருநாளுக்கும் இடையில் வரும் சனிக்கிழமையான மே 16ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான புதிய தினமாக அமையலாம் என்பது விடயமறிந்த வட்டாரங்களின் கணிப்பீடு.

ஏப்ரல் 25 ஆம் திகதியிலிருந்து மே 16 ஆம் திகதிக்குத் தள்ளிப் போடுவதன் மூலம் மூன்று வார கால அவகாசமே கொரோனா பேரிடரைச் சமாளிப்பதற்கு மேலதிகமாகக் கிட்டும். அதுவும் இந்தப் பேரிடரைச் சமாளிக்கப் போதுமானதா என்பது சந்தேகமே.

சில சமயங்களில் இந்தப் பேரிடர் நெருக்கடி மோசமானால் தீவிர நடவடிக்கை எடுத்து அதனை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு வதற்காக அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்த வும், தடுப்பு நடவடிக்கைகளுக்குப் போதிய கால அவகாசம் வழங்கும் விதத்தில் தேர்தலை ஜூலை முதல் வாரத்துக் குத் தள்ளிப்போடவும் கூட வாய்ப்புண்டு என சில வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

சரி, இப்படித் தமக்கு விரும்பியபடி தேர்தல் திகதிகளைத் தள்ளி வைக்கவும், புதிய திகதியைத் தீர்மானிக்கவும் சுயாதீன தேர்தல் ஆணையத்துக்கு எங்கிருந்து – எந்தச் சட்டத்தில் இருந்து – அதிகாரம் வருகின்றது என்ற ஒரு நியாயமான கேள்வி எழுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டங்கள், தேர்தல்கள் தொடர்பான அரசமைப்பு விதிகள், ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் –

அரசமைப்பில் 17ஆவது திருத்தத்தின் கீழ்கொண்டு வரப்பட்டதும், 19ஆவது திருத்தின் மூலம் மீளவும் உறுதிப்படுத்தப்பட்டதுமான ஓர் அரசமைப்பு ஏற்பாடு உள்ளது.

அது, நீதியான, சுயாதீனமான, சுதந்திரமான, வெளித் தலையீடற்ற, நேர்மையான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுவது மிக மிக அத்தியாவசியமானவை என சுயாதீன தேர்தல் ஆணையம் கருதுகின்றதோ அவற்றை அது எடுக்கலாம் என்ற சாரப்பட ஒரு கட்டுமட்டில்லாத – பரந்த, விரிவான, விசாலமான – அதிகாரத்தை அந்த அரசமைப்பு ஏற்பாடு தேர்தல் ஆணையகத்துக்கு வழங்கியுள்ளது.

தற்போதைய கொரோனா வைரஸ் தாக்கம் என்ற பேரிடர் நெருக்கடிக்கு மத்தியில் சுதந்திரமான, சுயாதீனமான, நேர்மையான, ஒழுங்கான, ஜனநாயக முறையிலான தேர்தல் ஒன்றை நடத்தி முடிப்பதற்காக மேற்படி அதிகாரத்தைப் பிரயோகித்து, புதிய தேர்தல் திகதியை பொருத்தமான தினத்தில் தேர்தல் ஆணையம் தீர்மானித்து முடிவு எடுக்க முடியும்.

# பொருளாதாரப் பாதிப்பைக் குறைக்க ஜனாதிபதி முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்பை குறைப்பதற்காக புதிய பொருளாதார பொதி ஒன்றை ஜனாதிபதி அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், இதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி, செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களை நிதியமைச்சின் செயலாளருக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடக சந்திப்பு நேற்று வியாழக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானம் வருமாறு:–

புதிய கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலக பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளதுடன், போக்குவரத்து, சுற்றுலா மற்றும் விமான பயணத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நோய் ஆரம்பமான சீனாவினால் நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் தவிர்ப்பதற்கும் மேற்கொண்ட நடைமுறையின் காரணமாக நோய் பரவுவதை கட்டுப்படுத்திய நடைமுறையை அந்த நாடு எடுத்துக்காட்டியதுடன், தற்பொழுது இந்த புதிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதிலும் வளர்ச்சியடைந்த நாடுகள் உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளில் பரவி வருகின்றது.

இந்த நிலைமையின் கீழ் நாட்டில் பொது மக்கள் சுகாதார சேவையை முன்னெடுத்தல், நோய்க்கான சிகிச்சையை வழங்குவதற்காக முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல், பாரிய அளவிலான வரையறுக்கப்பட்ட சேவை மற்றும் விநியோகத்தை மேற்கொள்வதைப் போன்று சுற்றுலா ஏற்றுமதி வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அந்த துறைகள் சம்பந்தப்பட்ட சிறிய வர்த்தகங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கட்டுப்படுத்துவதற்காக அரசு தலையிடுவது அவசிமாகியுள்ளது.

2020 மார்ச் மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 2020 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

அத்தோடு அதுவரையில் கடைப்பிடிக்கப்பட்ட இடைக்கால நிறைவேற்று கணக்கின் மூலம் வழங்கப்பட்டிருந்த மானியம், 2019 ஆம் ஆண்டுக்கு அமைவாக மருந்துகளைக் கொள்வனவு செய்தல், உரத்தை கொள்வனவு செய்தல் மற்றும் பல்வேறு நிர்மாணங்களை மேற்கொள்வதற்கான பற்றுச்சீட்டுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதைப் போன்று 2020 பொதுத் தேர்தலை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை என்ற அடிப்படையில் தேவையான மானியத்தை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு எதிர்கட்சியின் ஒத்துழைப்பு கிடைக்காமையின் காரணமாக மாற்று முறை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டி அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

இதனால் அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாக இந்த பணிகளுக்கு தேவையான மானியத்தை பெற்றுக்கொள்வதற்கான முறைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளமையுடன், இதற்கு அமைவாக திறைசேரியினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன –

நிலுவை மருந்து பற்றுச்சீட்டை செலுத்துவதற்காக 10 பில்லியன் ரூபாவை விடுவித்தல்.

* கொரோனா ஒழிப்பு செயற்பாடுகளுக்காக 500 மில்லியன் ரூபாவை விடுவித்தல்.

* உர பெறுகைக்கான பற்றுச்சீட்டு தொகையை செலுத்துவதற்காக 3 பில்லியன் ரூபாவை விடுவித்தல்.

* சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பற்றுச்சீட்டு தொகையை தீர்ப்பதற்காக 5 பில்லியன் ரூபாவை விடுவித்தல்.

* 2 வருட காலம் முழுவதும் செலுத்தப்படாத சிரேஷ்ட பிரஜைகளின் வைப்பீட்டுக்கான வட்டிக்காக 46 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தல்

* 2020 பொது தேர்தலுக்கு தேவையான 8 பில்லியன் ரூபா மானியத்தை வழங்குதல்.

சர்வதேச பொருளாதாரத்தில் உருவாகியுள்ள மந்த போக்கின் காரணமாக பொருளாதாரத்தில் உள்ள இடர்நிலையை கவனத்தில் கொண்டு மத்தியகால தேசிய தீர்வு தொடர்பில் ஈடுபடவேண்டிய நிலைமை பெரும்பாலான நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு அமைவாக தற்பொழுது உலக சந்தையில் நிலவும் எரிபொருள் விலை குறைவை கவனத்திற்கொண்டு உரிய பயனைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அரசாங்கத்தினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட துறைகளின் நிபுணர்களின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு கீழ் கண்ட ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது :–

* வீதி நெரிசலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பொது மக்களைப் போன்று தனியார் வாகன போக்குவரத்தை இலகுபடுத்துவதை நோக்காக கொண்டு தற்பொழுது சந்தையில் எரிபொருள் விலையை அதேபோன்று முன்னெடுத்தல்.

* எரிபொருள் இறக்குமதியில் அரசாங்கத்துக்கு இலாபத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இறக்குமதி வரியை விதித்தல்.

* சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறைவினால் கிடைக்கப்பெறும் தொகையை பயன்படுத்தி எரிபொருள் நிலைப்படுத்திய நிதியத்தை அமைத்தல் மற்றும் 6 மாத காலப்பகுதிக்குள் 200 பில்லியனை இந்த நிதியத்திற்குள் திரட்டுதல்.

* இலங்கை மின்சார சபையினால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய தொகையை குறைக்கக்கூடிய வகையில் இந்த நிதியத்தில் 50 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சார சபைக்கு வழங்குதல் அதன் மூலம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கிக்கும் இலங்கை வங்கிக்கும் செலுத்தவேண்டிய கடன் நிலுவையை தீர்த்தல்.

* எரிபொருள் விலை குறைப்பை கவனத்தில் கொண்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் மசகு எண்ணெய் ஒரு லீட்டர் 70 ரூபா வீதம் இலங்கை மின்சார சபைக்கு வழங்குதல் அதன் மூலம் அனல் மின்நிலையத்தினால் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுக்கு செலவாகும் 30 மில்லியன் ரூபாவிலும் பார்க்க குறைத்து வங்கி கடன் மற்றும் வட்டி தொகையை தீர்த்தல்.

* நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் வரட்சி நிலை நிலவுவதும், தற்போதைய நிலைமையின் கீழ் நியாயமான விலைக்கு அத்தியாவசிய பொருள்களை வழங்கும் தேவையை கவனத்தில் கொண்டு 1 கிலோ கிராம் பருப்பின் ஆகக்கூடிய சில்லறை விலை 65 ரூபாவாகவும், ரின் மீன் 425 கிராம் ரின் மீனின் ஆகக் கூடிய சில்லறை விலையை 100 ரூபாவாக குறைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

* புதிய கொரோனா வைரஸின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலா, தைத்த ஆடை, வர்த்தகம் போன்ற துறைகளை வர்த்தக பேண்தகு முறையில் முன்னெடுப்பதற்காக கீழ் கண்ட நிவாரணங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது :–

* வங்கி மற்றும் நிதி நிறுவனங்களினால் பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்காக 6 மாத நிவாரண காலத்தை வழங்குதல்.

* விசேடமாக தகவல் தொழில்நுட்ப மற்றும் தைத்த ஆடைத்துறைக்காக நெகிழ்வுத்தன்மையைக்கொண்ட கடமைக்கான கால எல்லையை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின கொடுப்பனவுக்கான நிவாரணத்தை வழங்குதல்.

* 4 சதவீத வட்டியின் அடிப்படையில் பணி மூலதன தேவையை ஏற்படுத்திக்கொடுத்தல்.

## நாளை 21.03.2020 – சனிக்கிழமை

நட்சத்திரம்: அவிட்டம் மு.இ 9.20 வரை
திதி : துவாதசி மு.ப 10.08 வரை

இராகுகாலம் : 9.17 – 10.47
சுப நேரம் : 3.17 – 4.47

# மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்ப்பது கட்டாயம்!

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 20

பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்க வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் சேனாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண வைரஸ் காரணமாக, யாழ். மாவட்டத்தில் பல்வேறு விதமான முன்னேற்பாடுகளைப் பொலிஸ் தலைமையகத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்ற வகையில் பொது மக்களுக்குக் கருத்து கூற முற்படுகிறேன். தற்போது கொரோனா எனப்படும் ஒரு வைரஸ் வந்த தீவிரமாக பரவி வருகிறது.

இதற்கமைய ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் மா அதிபர் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இணங்க பொது மக்கள் தங்களுடைய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வீடுகளில் இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பாக தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்வது மூலம் இந்த வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். குறிப்பாக கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல், முகக் கவசங்களை பாவித்தல், ஒருவருக்கு ஒருவர் இடைவெளியைப் பின்பற்றுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் இவற்றை நாங்கள் மேம்படுத்திக் கொள்ள முடியும். குறிப்பாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்ற வகையில் என்னால் கூறிக் கொள்வது என்னவென்றால், தங்கள் பாதுகாப்பைத் தாங்களே எடுத்துக்கொள்ள வேண்டும். பொது இடங்களில் ஒன்று கூடுதல், சமய வழிபாடுகளில் தற்போது ஈடுபடாமல் தவிர்த்துக் கொள்ளுதல் மற்றும் களியாட்ட நிகழ்வுகளில் பங்கு கொள்ளாமை போன்ற செயற்பாடுகள் மூலம் இவற்றை நாங்கள் தடுத்துக்கொள்ள முடியும் – என்றார். (ஜ – 07)

# முன்னாள் எம்.பி. சிறிதரனுக்கு சாதாரண பரிசோதனைதான்!

கொழும்பு, மார்ச் 20

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கொரோனா பரிசோதனை செய்ய வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் பொலிஸாரிடம் பதிவு செய்வதுடன், வைத்தியப் பரிசோதனை செய்யுமாறு அரசு அண்மையில் அறிவித்திருந்தது. இதற்காகத் தொலைபேசி இலக்கங்களும் அறிவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அண்மையில் ஜெனீவா சென்று திரும்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் வைத்தியப் பரிசோதனை மேற்கொண்டுள்ளார்.

அவருக்கு தொண்டை கரகரப்பு ஏற்பட்டதால் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். எனினும், அங்கு பரிசோதனை வசதி இல்லையென்பதால், நேற்றுக் காலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்குச் சென்றார்.

அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் நோய் அறிகுறிகள் இல்லையென்பது தெரியவந்துள்ளது. அது சாதாரண தொண்டைக் கரகரப்பு என தெரிய வந்தது. அவர் பரிசோதனையின் பின்னர் வீடு திரும்பினார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# கொரோனா ஒழிப்புக்கு 50 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற்று ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 50 கோடி ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை ஒதுக்கீடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைக் குறைப்பதற்கான முதலீடுகளை வழங்க ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானத்துக்கு அமைய அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஒன்றிணைந்த நிதியத்திடம் காணப்படும் நிதியைச் செலவிடுவதற்கான அதிகாரம் திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோகமார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை சனிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் –**

நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன் தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, லிங் ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், மாவடி ஒரு பகுதி, மூளாய், லு.னி.லு. Sea Foods பிறைவேற் லிமிற்ரெட் ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில்-**

அம்பகாமம், புழுமச்சினாதிக்குளம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

தள்ளாடி, சாந்திபுரம், தரவன்கோட்டை, கடலோரி வீதி, Sunny Village இருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyra house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரிஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பகுதியிலும் மின் தடையிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# லண்டனில் இருந்து தாயகத்துக்கு திரும்பியவர்கள் கண்காணிப்பில்!

கொழும்பு, மார்ச் 20

இலங்கைக்கு வர முடியாத நிலையில் இங்கிலாந்தில் தங்கியிருந்த 148 பேர், நேற்று மதியம் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக்குச் சொந்தமான யு – எல் – 504 எனும் விமானம் மூலம் லண்டன் நகரில் இருந்து இந்தப் பயணிகள் நாடு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, இந்த நபர்கள் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 16 கண்காணிப்பு நிலையங்களுக்கு இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கஞ்சா நுகர்ந்த இளைஞன் கைது

யாழ், மார்ச் 20

நீர்வேலி - கரந்தன் சந்திப் பகுதியில், நேற்றுமுன்தினம் கஞ்சா நுகர்ந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இளைஞன், கந்தரோடை - சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவரெனப் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட இளைஞனின் உடைமையில் இருந்து 650 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

விசேட ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் வீதியில் நின்ற இளைஞனைப் பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

இதன்போது, உடைமையில் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் இராணுவப் பேச்சாளர் சஜித் தரப்பில் களமிறங்குகிறார்!

கொழும்பு, மார்ச் 20

முன்னாள் இராணுவப் பேச்சாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுமித் அத்தப்பத்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ், குருணாகல் மாவட்டத்தில் அவர் போட்டியிடுகிறார். (ஜ)

# அரச ஊழியர் மார்ச் சம்பளம் திங்களன்று வழங்க ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 20

அரச ஊழியர்கள் அனைவரது மார்ச் மாதச் சம்பளத்தை வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை வழங்குமாறு திறைசேரிச் செயலாளர் பணித்துள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தல் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை வீட்டிலிருந்து பணியாற்றும் வாரமாக அரச பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஜ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

## கொரோனா வதந்தி பரப்பிய நபர் கைது தமிழகத்தில் சம்பவம்

சென்னை, மார்ச் 20

வெளிநாட்டிலிருந்து குற்றாலத்திற்கு வந்திருந்த வாலிபருக்கு, கொரோனா' நோய் தொற்றியிருப்பதாகச் சமூக வலைதளத்தில் வதந்தி பரப்பிய குற்றச்சாட்டில் ஒருவரை தமிழகப் பொலிஸார் கைது செய்தனர்.

நாகை மாவட்டம் குற்றாலத்தைச் சேர்ந்த 32 வயதான ஆனந்த் என்பவருக்கு கொரோனா தொற்று இருப்பதாக வதந்தி பரப்பிய குற்றச்சாட்டில் கில்லி பிரகாஷ் என்பவரையே பொலிஸார் கைது செய்தனர்.


ஆனந்த் சில நாள்களின் முன்பாகத்தான் லண்டனில் இருந்து தமிழகம் திரும்பினார். அவர் லண்டனில் இருந்து வந்ததால், கொரோனா பாதிக்கப்பட்டுள்ளார் என்று சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. இது அப்பகுதி மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியது.

இந்தத் தகவலை அடுத்து குற்றாலம் வட்டார சுகாதாரத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். ஆனந்த் உரிய மருத்துவப் பரிசோதனைக்கு பின்னரே குற்றாலம் வந்தமை தெரியவந்தது. மருத் துவக் குழுவினர் அவரை சோதனை செய்தபோது எந்தவித நோய் தொற்றும் இல்லாமல் அவர் நலமுடன் இருப்பதும் உறுதி செய்யப்பட்டது.

தனக்கு கொரோனா இருப்பதாக சமூக வலைத் தளத்தில் வதந்தி பரப்பியவர் கில்லி பிரகாஷ் என்ற நபரே என்று ஆனந்த் பொலிஸாரிடம் முறையிட்டார்.

இதையடுத்து பொதுமக்கள் மத்தியில் பீதியை உருவாக்குவதல், தகவல் தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த பொலிஸார் மயிலாடுதுறை கூறைநாடு பகுதியைச் சேர்ந்த 35 வயதான கில்லி பிரகாஷ் என்பவரைக் கைது செய்தனர்.

## அரசியலில் அலை முக்கியம் ரஜினி இப்படி அதிரடி உரை



சென்னை, மார்ச் 20

அரசியலில் அலை முக்கியம் என்று உதாரணங்களுடன் தெரிவித்தார் நடிகர் ரஜினிகாந்த். சில நாள்களுக்கு முன்னர் தான் அரசியலில் போட்ட புது புள்ளி தற்போது அமைதியாக யாருக்கும் தெரியாமல் சுழலாக உருவாகி வருகின்றது, தேர்தல் நெருங்க நெருங்க அது சுனாமியாக மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

'சாணக்யா' இணையதளத்தின் முதலாம் ஆண்டு விழா மற்றும் விருது வழங்கும் விழா, சென்னையில், நடந்தது. அதில், பேசிய ரஜினி, அரசியலில் அலை முக்கியம் என்பதால்தான் அலை உண்டாகவேண்டும்; இயக்கம் உருவாக வேண்டும் என்றேன். உடனே, 'இவர் வர மாட்டாரா எனக் கேட்கின்றனர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது–

சினிமாவில் இருந்து வந்த, எம்.ஜி.ஆர்., முதல்வரானார். அவர், 25 ஆண்டுகள், தி.மு.கவில் இருந்தார்; ரொம்ப நல்லவர்; நிறைய உதவிகள் செய்துள்ளார். கருணாநிதி முதல்வராக, அவரும் காரணம். பொருளாளராக இருந்த அவர், கணக்கு கேட்டதற்காக, கட்சியில் இருந்து அவரை நீக்கினர்.

அவர் மக்கள் மத்தியில் சென்று, 'என்ன தவறு செய்தேன்; கணக்கு கேட்டது தப்பா'? என, கேட்டார். அனுதாப அலை வீசியது. முதல் முறையாக, தேர்தலில் வெற்றி பெற்றார்.

அடுத்து, 1991இல், காங்கிரஸ் கட்சியோடு, ஜெயலலிதா, கூட்டணி வைத்தார். ராஜீவ் காந்தி படுகொலையால், தி.மு.கவிற்கு எதிரான அலை வீசியது. முதன் முறையாக, ஜெயலலிதா, வெற்றி பெற்றார்.

ஆந்திராவில், ஒரே ஆண்டில், மூன்று முதல்வரை, இந்திரா மாற்றினார். 'ஆந்திராவை தெலுங்கர் ஆள வேண்டும்' என, என்.டி.ராமராவ் கட்சி ஆரம்பித்தார். அலை உருவானது; அவர் முதல்வரானார்.எனவே, அலை முக்கியம்.

நான் கொஞ்ச நாள் முன், அரசியலில் புது புள்ளி போட்டேன். அந்த புள்ளி, தற்போது அமைதியாக, யாருக்கும் தெரியாமல், சுழலாக உருவாகி உள்ளது; இந்த சுழலை தடுக்க முடியாது. இது, மக்கள் மத்தியில் உருவான சுழல். அதை, வலுவான அலையாக மாற்ற, ரஜினி வந்தாக வேண்டும்; ரஜினி ரசிகர்களும் வரவேண்டும்.

அந்த அலை, கரையை நெருங்க நெருங்க, தேர்தல் நெருங்க நெருங்க, அரசியல் சுனாமியாக மாறும். அது, ஆண்டவன் கையில் உள்ளது. அந்த ஆண்டவன், மக்களாகிய நீங்கள் தான்; நீங்கள் தான், அதை உருவாக்கவேண்டும்; அது உருவாகும். அதிசயம் நிகழும்.– இவ்வாறு ரஜினி பேசினார்.

## தமிழகத்திற்குள் நுழைவோர் மீது 89 வழித் தடங்களில் கண்காணிப்பு

சென்னை, மார்ச் 20

வெளி மாநிலங்களில் இருந்து, தமிழகத்திற்கு வரக்கூடிய, 89 வழித் தடங்களில், சோதனைச் சாவடிகள் அமைத்து, பயணிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். வருவாய் நிர்வாக ஆணையர் ராதாகி ருஷ்ணன் இந்தத் தகவலை ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தமிழக எல்லையில், 44 இடங்களில் வெளிமாநிலங்களில் இருந்து வர, 89 வழித்தடங்கள் உள்ளன. அவற்றில், சுகாதாரத்துறை, வருவாய், காவல்துறை உள்ளிட்ட துறைகளுடன் இணைந்து, சோதனை மையம் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து பயணியருக்கும் காய்ச்சல் இருக்கிறதா எனக் கண்காணிக்கப்படுகிறது. மேலும், வாகனங்களுக்கு, கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில், 37 மாவட்டங்களிலும், பேரிடர் மாவட்ட கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 58 ஆயிரத்து 2 பள்ளிகள், 2,051 கல்லூரிகள், 52 ஆயிரத்து 601 அங்கன்வாடிகள் உள்ளிட்ட பகுதிகளில், கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், 1,000 திரையரங்கங்கள், 42 வணிக வளாகங்கள், 660 பொழுது போக்கு இடங்கள், 531 'பார்'கள் உள்ளிட்டவை மூடப்பட்டு, தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு உள்ளன.

5,592 வழிப்பாட்டு தலங்கள், 7,242 பஸ், ரயில், ஆட்டோ நிறுத்தங்கள் உள்ளிட்டவற்றில் தொடர்ந்து கிருமி நாசினி தெளிக்கப்படுகிறது. 327 பஸ் பணிமனைகளில், தினமும், 2,000 பஸ்களுக்கு கிருமி நாசினி தெளிக்கப்படுகிறது. அதேபோல், 789 ரயில் பெட்டிகளுக்கும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது

## தமிழக முட்டை உற்பத்தித் துறையையே அதளபாதாளத்தில் தள்ளிய கொரோனா!

சென்னை, மார்ச் 20

கொரோனா வைரஸ் தாக்கும் என்ற வதந்தியால், தமிழகத்தில், கோழி இறைச்சி மற்றும் முட்டை வியாபாரம் மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. சில நாள்களில் மட்டும் 1,500 கோடி இந்திய ரூபாய்களுக்கு மேல் கோழி வளர்ப்புத் துறை நட்டமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறைச்சி மற்றும் முட்டை வாங்குவதை மக்கள் தவிர்த்து வருவதனால் முட்டை விலை, 3 ரூபாயாகவும், ஒரு கிலோ கோழி இறைச்சி, 60 ரூபாயாகவும் சரிவடைந்தது.

இதையடுத்து மக்கள் அச்சத்தைத் தெளிய வைக்கும் வகையில், 'கோழி இறைச்சி சாப்பிடுவதால் எந்த பிரச்சினையும் வராது' என, தமிழக அரசு தெரிவித்துள்ளது.

திருப்பூர் மாவட்டம், பல்லடம்; நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில், 3,500க்கும் மேற்பட்ட கோழி பண்ணைகள் உள்ளன. அங்கிருந்து, தினமும் சராசரியாக, 30 லட்சம் கிலோ, கறிக்கோழிகள் விற்பனைக்காக, உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், 900 பண்ணைகளில், ஐந்து கோடி கோழிகள் வாயிலாக, தினமும், நான்கு கோடி முட்டைகள் உற்பத்தியாகின்றன.

கொரோனா வைரஸ், இந்தியாவில், பரவி வரும் நிலையில் கறிக்கோழி வாயிலாக, கொரோனா வைரஸ் மற்றும் பறவைக் காய்ச்சல் பரவுவதாக, சமூக வலைதளங்களில் வதந்தி பரப்பப்பட்டதை அடுத்து இந்த வர்த்தகம் படுத்த படுக்கையாகி விட்டது.

ஹோட்டல்களிலும், கோழி இறைச்சியில் செய்யப்படும், 'சிக்கன் 65, சிக்கன் ரைஸ்' உள்ளிட்ட உணவு வகைகளின் விற்பனை முடங்கியுள்ளது. இதையடுத்து, மொத்த விலை சந்தையில், கடந்த மாதம், கிலோ 80 ரூபாய்க்கு மேல் விற்பனையான கறிக்கோழி விலை, தற்போது, 30 ரூபாய்க்கு கீழ் குறைந்துள்ளது.

சில்லரை விற்பனையில், கிலோ, 160 ரூபாய் வரை விற்கப்பட்ட, தோல் உரிக்கப்படாத கோழி இறைச்சி தற்போது, 60 முதல், 70 ரூபாய் எனக் குறைந்து உள்ளது. மேலும், 180 ரூபாய் வரை விற்கப்பட்ட தோல் உரிக்கப்பட்ட கோழி இறைச்சி விலை, தற்போது, 80 முதல், 90 ரூபாய் என, சரிவடைந்துள்ளது.

முட்டைகள் வாங்குவதையும், மக்கள் தவிர்த்து வருவதால், பண்ணைகளில், 20 கோடிக்கும் அதிகமான முட்டைகள் தேங்கியுள்ளன. அவற்றையும் பாதுகாக்க முடியாமல், வியாபாரிகள், மண்ணில் புதைத்து வருகின்றனர்.

'மக்களிடம் கோழி இறைச்சி சாப்பிட்டால் எந்த பாதிப்பும் வராது' என, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, '1 கிலோ கோழி இறைச்சி வாங்கினால், அரை கிலோ இலவசம் அல்லது 10 முட்டைகள் இலவசம்' என, வியாபாரிகள், பல சலுகைகளை வழங்கி வருகின்றனர்.

அப்படி இருந்தும், யாரும், கோழி இறைச்சி, முட்டை வாங்க முன்வரவில்லை. இதனால், சில்லரை விற்பனையில், இம்மாத துவக்கத்தில், 4.50 ரூபாய்க்கு விற்பனையான முட்டை விலை, தற்போது, 3 ரூபாயாக வீழ்ச்சி அடைந்துஉள்ளது.

கறிக்கோழி மற்றும் முட்டை விற்பனை முடங்கியுள்ளதால், கோழி பண்ணை உரிமையாளர் களுக்கு, 10 நாள்களில் மட்டும், 1,350 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டு உள்ளது என்று தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு, நாமக்கல் மண்டலத் தலைவர் செல்வராஜ் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 10 மாத பெண் குழந்தைக்கு உரிமை கோரும் அப்பாக்கள்

சென்னை, மார்ச் 20

தமிழகத்தில் 10 மாதப் பெண் குழந்தை ஒன்றுக்குப் பல தந்தையர்கள் உரிமை கொண்டாடியதால் அந்தக் குழந்தையை நலக் குழுவிடம் ஒப்படைத்தார் தாயார்.

குழந்தையின் தாயார் ஒரு வருட காலத்திற்குள் பல ஆண்களுடன் குடும்பம் நடத்தியதன் விளைவாகவே ஒன்றுக்கு மேற்பட்ட தந்தையர்கள் குழந்தைக்கு உரிமை கோரி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளத்தை சேர்ந்தவரா 30 வயதுடைய தேவி கட்டடத் தொழிலாளியாக இருக்கிறார். பால்ராஜ் என்பவருடன் மூன்றாண்டுகளுக்கு முன்பு இவருக்குத் திருமணம் நடந்தது.

தேவிக்கும் வினோத் என்பவருக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறி ஊர் பஞ்சாயத்து மூலம் பால்ராஜ் விவாகரத்து பெற்றார். தேவியுடன் குடும்பம் நடத்திய வினோத் வெளிநாடு சென்ற நிலையில் இறந்தார்.

இதையடுத்து சரத் என்ற வேல்முருகனுடன் தேவி வாழ்ந்து வந்தார். 10 மாதங்களிற்கு முன்பு ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் தேவிக்குப் பெண் குழந்தை பிறந்தது.

அதன்பின் வேல்முருகை பிரிந்து மாற்றுத்திறனாளி ஒருவருடன் தேவி இப்போது வாழத்துவருகிறாள். குழந்தையை வினோத் ஞாபகமாக தான் வளர்கின்றேன் என்று கூறி வினோத்தின் சகோதரி வாங்கிச் சென்றார்.

ஆனால் தனது குழந்தையை தேவி விற்பனை செய்து விட்டார் என்று வேல்முருகன் அரச குழந்தைகள் நலக்குழுவிடம் முறையிட்டார். குழந்தைகள் நலக் குழுவினர் விசாரித்தனர். குழந்தைக்கு பலர் சொந்தம் கொண்டாடுவதால், குழந்தையை நலக்குழுவிடமே தாம் ஒப்படைப்பதாகத் தேவி தெரிவித்தார். சட்டப்படி குழந்தையை பாதுகாக்க அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 50 வீதம் அரச பணியாளர்கள் வீட்டிலிருந்தே இனிப் பணி

புதுடில்லி,மார்ச் 20

கொரோனா நோய் பாதிப்பை அடுத்து இந்திய அரசுத் துறை ஊழியர்களில் 50 சதவீதம் பேர் வீட்டிலிருந்தே வேலை செய்யலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்தியாவில் 168 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதால் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இந்திய அரசு இறுக்கி வருகின்றது. பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் கூட்டமாக கூடுவதை தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தலைநகர் டில்லியில் 10 பேருக்கு மேல் ஒன்றுகூடுவது தடை செய்யப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

மத்திய அரசு அறிவுறுத்தலின்பேரில், கணினி சார்ந்த பணியாளர்களுக்கு வீட்டிலிருந்தபடியே பணியாற்றும் வாய்ப்பை நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

அந்த வகையில் மத்திய அரசு அலுவலகங்களில் பணியாற்றும் 'பி' மற்றும் 'சி' பிரிவு ஊழியர்களில் 50 சதவீதம் பேர் மட்டுமே அலுவலகத்திற்கு வந்து பணியாற்ற வேண்டும் என்றும், எஞ்சிய 50 சதவீதம் பேர் வீடுகளில் இருந்தே பணியாற்ற வேண்டும் என்றும் மத்திய அரசு உத்தரவிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் 22 லட்சம் பேர் கொரோனாவால் உயிரிழப்பர்!

## இங்கிலாந்தில் நடந்த ஆய்வு முடிவுகள் எதிர்வுகூறின

லண்டன், மார்ச் 20

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அமெரிக்காவில் 22 லட்சம் பேரும் இங்கிலாந்தில் 5 லட்சம் பேரையும் கொரோனா வைரஸ் கொல்லும் என்று இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இங்கிலாந்தில் உள்ள இம்பீரியல் கல்லூரியை சேர்ந்த கணித உயிரியல் பேராசிரியர் நீல் பெர்குசன் தலைமையிலான குழு, கொரோனா வைரஸ் நோய் பற்றிய ஒரு ஆய்வை மேற்கொண்டது.

ஐரோப்பிய நாடுகளில் பெருத்த உயிர்ச்சேதத்தை சந்தித்துள்ள இத்தாலியில் இருந்து பெறப்பட்ட தரவுகள் அடிப்படையில் இந்த ஆய்வை அவர்கள் செய்துள்ளனர்.

1918ஆம் ஆண்டு, முதல் உலகப்போரின்போது பரவிய ஸ்பானிஷ் புளூ காய்ச்சலுடன் கொரோனா வைரஸ் நோயை ஒப்பிட்டு உள்ளனர். அதன் அடிப்படையில்தான், பேராசிரியர் நீல் பெர்குசன் குழுவினர், அமெரிக்காவில் 22 லட்சம் பேரையும், இங்கிலாந்தில் 5 லட்சம் பேரையும் கொரோனா வைரஸ் பலிகொள்ளும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த குழுவில் இடம் பெற்றிருந்த தொற்று நோயியல் துறை பேராசிரியர் அஸ்ரா கனி, “இது சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் நமக்கு மிகப்பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தும்” என்று கூறி இருக்கிறார்.

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் தொற்று நோயியல் துறை வல்லுனர் டிம் கால்பர்ன், “இந்த ஆய்வு தகவல்கள், நாம் கடினமான கால கட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கிறது என்பதற்கான சமிக்ஞையாக அமைந்துள்ளது” என்று கூறி உள்ளார்.

ஆனால் ஒன்றை குறிப்பிட்டாக வேண்டும். 1918ஆம் ஆண்டு ஸ்பானிஷ் புளூ வெடித்தபோது, உலக போர் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு இந்த நோய் தகவல்கள் வெளியானால் பதற்றம் ஏற்படும் என்று பல நாடுகள் செய்திகளை வெளியிடாமல் பார்த்துக் கொண்டன. விழிப்புணர்வு பிரசாரங்களும், தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆனால் இப்போது அப்படியல்ல. பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்கள், முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

எனவே இங்கிலாந்து ஆய்வு தகவல் கணிப்பு பொய்க்கும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் உயிரிழப்பு ஏற்படாது என்றும் கூறப்படுகின்றது.

### கொரோனாவையும் வீழ்த்துவோம்; அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சூளுரை

கண்ணுக்கு தெரியாத எதிரியுடன் நாம் போரில் ஈடுபட்டுள்ளோம். நாம் மட்டுமின்றி, உலகமே போரில் ஈடுபட்டுள்ளது. கண்ணுக்கு தெரியாததாக இருந்தாலும், உலகமே தெரிந்து கொண்டு ஒன்றாகி விட்டது. நிச்சயமாக அந்த எதிரியை வீழ்த்துவோம். அதற்காக எல்லா வளங்களையும் பயன்படுத்துவோம்.

இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் அமெரிக்காவில் 155 பேர் உயிரிழந்துள்ள நிலையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ட்ரம்ப் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

இந்த பிரச்சினைக்கு நாம் தீர்வு கண்ட பிறகு, வழக்கமான பணிகளுக்கு விரைவில் திரும்பலாம். அதுவரை பொதுமக்கள் தங்கள் வீடுகளிலேயே இருந்து வாழ்க்கையை மகிழ்ச்சியாக கழிக்க வேண்டும். உலகத்தில், பாதிப்பு இல்லாத நாடுகள் பட்டியலில் அமெரிக்கா நிச்சயம் இடம் பெறச்செய்வேன். இந்தப் போரில் நாம் வெற்றிபெற காலதாமதம் ஆவது நல்லது அல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.

### பிடன் தொடர்ந்து வெற்றி

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தேர்தலில் ஜோ பிடன் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார். குடியரசு கட்சி சார்பில் டிரம்ப் போட்டி உறுதியானது.

அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கு நவம்பர் 3ஆம் திகதி அங்கு தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடப்போகும் வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், அமெரிக்க மாகாணங்களில் நடந்து வருகிறது.



### ஞாயிறன்று இந்தியா முழுதும் சோதனை முடக்கம் நடைமுறை

புதுடில்லி, மார்ச் 20

உலகின் பெரும்பாலான நாடுகளில் பரவி வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இந்தியர்கள் எவரும் வீடுகளைவிட்டு வெளியே வரவேண்டாம் என்று பிரதமர் நரேந்திர மோடி கேட்டுள்ளார். இது ஒரு சோதனை நடவடிக்கை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் ஏற்படும் பாதிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றினார். அவர் பேசியதாவது:

கொரோனா வைரசைப் பொதுமக்கள் விழிப்புணர்வோடு எதிர்கொள்ள வேண்டும். முடிந்த வரை தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.



22 திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை பொதுமக்கள் யாரும் வீடு களை விட்டு வெளியே வரவேண்டாம். அத்தியாவசிய சேவைகளில் பணிபுரிவோர் தவிர மற்றவர்கள் யாரும் ஞாயிறன்று வெளியே வரவேண்டாம். 22ஆம் திகதி கொரோனா வைரஸ்க்கு எதிரான சோதனை ஓட்டமாக இருக்கும்.

மருத்துவர்கள், ஊடகத்தினர், போக்குவரத்து துறையினர் போன்றவர்களுக்கு மற்றவர்கள் உறுதுணையாக நிற்கவேண்டும். 22ஆம் திகதி மாலை 5 மணிக்கு இல்லத்தின் வாயிலில் நின்று அத்தியாவசியப் பணியில் ஈடுபடுவோருக்கு மற்றவர்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்.

மருத்துவர்களுக்கு கைத்தட்டல் மூலம் நன்றி சொல்லுங்கள். கொரோனாவை தடுத்து நமது வலிமையை நிரூபிப்போம்.

வேலை இல்லாததால், ஏழைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது. அச்சத்தினால் அத்தியாவசியப் பொருட்களை யாரும் வாங்கிக் குவிக்க வேண்டாம். பொருளாதார மந்த நிலையை போக்குவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது மக்களுக்காக மக்களாகவே பிறப்பித்துக்கொள்ளும் ஊரடங்கு உத்தரவு ஆகும். ஒவ்வொரு குடிமகனும் குறைந்தபட்சம் பத்து சக குடிமக்களிடம் ஊரடங்கு என்றால் என்ன என்று குறித்து விளக்கவேண்டும். வேலையில்லாத நாள்களில் பணியாளர்களுக்கு நிறுவனங்கள் சம்பளத்தை நிறுத்த வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

# 10 ஆயிரம் சாவுகளை நெருங்கும் கொரோனா

## 2 லட்சத்து 30 ஆயிரம் பேருக்குத் தொற்று

லண்டன், மார்ச் 20

உலக நாடுகளை உலுக்கிவரும் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆயிரத்தை எட்டி வருகின்றது. ரஷ்யா நாட்டில் நேற்று முதலாவது உயிரிழப்பு நிகழ்ந்தது.

சீனாவின் ஹூபேய் மாகாணத்தின் வுகான் நகரத்தில் கடந்த டிசெம்பர் மாதம் கண்டு பிடிக்கப்பட்டது முதல் இதுவரையில் 175 நாடுகளுக்குப் பரவியுள்ளது கொரோனா வைரஸ்.

நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உலக நாடுகள் பலவும் போர்க் கால அடிப்படையில் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ள நிலையிலும் அதன் பரம்பலும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் தொடர்ந்தும் அதிகரித்தே வருகின்றன.

நேற்று முன்னிரவு வரையில் 2 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. 9 ஆயிரத்து 386 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர். மேலும் சுமார் 7 ஆயிரம் பேரின் நிலைமை ஆபத்தானதாக இருக்கின்றது.

86 ஆயிரத்து 254 பேர் இதுவரையில் இந்த நோய்த் தாக்கத்திலிருந்து மீண்டு குணமாகியிருக்கிறார்கள்.

சீனாவை மிக மோசமாகத் தாக்கியிருந்த இந்த நோயின் பரம்பல் அங்கு தற்போது கட்டுக்குள் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நோயால் சீனாவில் ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட ஐரோப்பாவில் ஏற்பட்ட உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

மார்ச் மாதத்தில் நோய்த் தொற்றுக்கு உள்ளானவோரின் எண்ணிக்கையும் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளன.

சீனாவின் அயல் நாடாக இருந்தபோதும் ரஷ்யாவில் நேற்று வரையில் உயிரிழப்புக்கள் ஏதும் நிகழவில்லை. முதல் நோயாளி நேற்று உயிரிழந்தார். இறந்தவருக்கு வயது 79. இதுவரையில் 147 பேருக்கு அங்கு கொரோனா பரவியுள்ளதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

தென்னமெரிக்க நாடான மெக்சிக்கோவிலும் கொரோனாவால் முதல் உயிரிழப்பு நேற்று நிகழ்ந்தது. அமெரிக்காவில் ஏற்கனவே 155 பேர் உயிரிழந்திருந்தபோதும் அதன் எல்லை நாடான மெக்சிக்கோவில் நேற்று வரையில் உயிரிழப்புக்கள் நிகழ்ந்திருக்க வில்லை. எனினும் அங்கு 118 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் கொரோனாவால் நேற்றும் ஒருவர் இறந்ததை அடுத்து உயிரிழந்தோர் எண்ணிக்கை நேற்று நான்காக அதிகரித்தது.

இத்தாலியில் ஒரே நாளில் 245 பேர் கொரோனா நோயால் இறந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

### சீனா அறிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட வுகான் நகரம் உள்ளடங்கலான ஹூபேய் மாகாணத்தில் கடந்த 36 மணி நேரத்தில் புதிய நோயாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என்று சீனா அறிவித்துள்ளது.

நிலமை கட்டுக்கு வந்துள்ளதை அடுத்து மருத்துவ அவசர நிலையில் தளர்வு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொரோனாவின் பாதிப்பால் 2.5 கோடிப் பேர் வேலையிழப்பர்: ஐ.நா.

கொரோனா வைரஸ் பாதிப்பால் உலகம் முழுவதும் 2.5 கோடி மக்கள் வேலைகளை இழப்பார்கள் என்று ஐக்கிய நாடுகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நோயின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை வேகமாக நெருங்கி வரும் நிலையில் இதன் பக்க விளைவான வேலை வாய்ப்பின்னை எதிர்காலத்தில் இன்னும் பெரும் சமூகச் சிக்கலை ஏற்படுத்தப் போகின்றது என்று எதிர்வுகூறப்படுகின்றது.

கொரோனா பீதியால் பல நாடுகளில் வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. விமானச் சேவைகள், ரெயில் சேவைகள் மற்றும் பஸ், வாடகைக் கார்கள் உள்ளிட்ட பொது வாகனங்களும் வெகு குறைவாகவே இயக்கப்படுவதால் பெருநகரங்களில் மக்களின் அவசியமற்ற போக்குவரத்து வெகுவாக குறைந்து காணப்படுகிறது.

மிகப்பெரிய வணிக வளாகங்கள், திரையரங்குகள், மது விடுதிகள், கேளிக்கை அரங்கங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சில நாடுகளில் சராசரியான பண நடமாட்டமும் அரசின் வருமானமும் சுருங்கிப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், கொரோனா வைரஸ் பாதிப்பால் உலகம் முழுவதும் சுமார் இரண்டரை கோடி மக்கள் வேலைகளை இழப்பர் என்றும் இதன் எதிரொலியாக 3 கோடியே 40 லட்சம் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு வருமான இழப்பு ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபைக்கான தொழிலாளர் நல அமைப்பு நேற்று வியாழக்கிழமை வெளியிட்ட மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த மோசமான நிலையை களைவதற்காக சர்வதேச அளவில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து உருவாக்கும் கொள்கை முடிவின் மூலம் இந்த மதிப்பீட்டு எண்ணிக்கை வெகுவாக குறையலாம் என்றும் ஆய்வை நடத்திய நிபுணர்கள் கருதுகின்றனர்.

# உலகையே ஆட்டிப் படைக்கும் கொரோனா

# உண்மையில் உயிரியல் ஆயுதமா? பின்னணி என்ன?

எஸ்.பி.தாஸ்
[இந்திய மத்திய அரசின் 'விஞ்ஞான் பிரச்சார்' தன்னாட்சி அமைப்பில் முதுநிலை விஞ்ஞானி]

சீனாவின் ரகசிய ஆயுத ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து உயிரியல் போர் ஆயுதமாக தயாரிக்கப்பட்ட கிருமி தவறுதலாக வெளியேறி பரவியது தான் கொரோனா வைரஸ் என்ற புரளிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது சமீபத்திய ஆய்வு.

அமெரிக்காவின் 'ஸ்க்ரிப்ஸ் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்' என்ற நிறுவனத்தை (Scripps Research Institute) சேர்ந்த கிறிஸ்டியன் ஆண்டர்சன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவானது புகழ்பெற்ற 'நேச்சர் மெடிஸன்' ஆய்விதழில் செவ்வாயன்று (March 17, 2020) வெளியாகியுள்ளது.

SARS - CoV - 2 என்ற அறிவியல் பெயரைக் கொண்ட இந்த வைரஸின் மரபணுக்களை ஆய்வு செய்த நிபுணர்கள், அவை ஆய்வகத்தில் செயற்கையாகவோ அல்லது மரபணுமாற்றம் செய்யப்பட்டோ உருவாகவில்லை என்றும் இயற்கையில் பரிணமித்த புதிய இனப்பிரிவு என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த டிசம்பரில் சீனாவின் வூஹான் நகரில் மனிதர்களிடம் நோயை ஏற்படுத்தும் SARS - CoV - 2 இனப்பிரிவைச் சேர்ந்த கொரோனா வைரஸ் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியது.

அப்போது முதல் 2020 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி வரையிலான கால கட்டத்தில் மட்டும் 110 நாடுகளில் குறைந்தபட்சம் 1,21,564 நபர்களிடம் இந்த நாசகார கிருமி பரவி சுமார் 4,373 மனித உயிர்களைக் குடித்துள்ளது.

வூஹான் நகரில் வைரஸ் ஆய்வு நிறுவனம் உள்ளதால் கொரோனா வைரஸ் அங்கே இரகசியமாக தயாரிக்கப்பட்ட செயற்கை கிருமி என்ற புரளி எழுந்தது.

ஏற்கெனவே நாம் அறிந்துள்ள வேறு கொரோனா வைரஸ் இனப்பிரிவுகளின் மரபணு தொடரோடு புதிய இனப்பிரிவை ஒப்பிட்டு பார்க்கும்போது SARS - CoV - 2 இனப்பிரிவு வைரஸ் இயற்கையில் பரிணமித்த ஒன்று என்பது தெள்ளத்தெளிவாகப் புலப்படுகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

### கிரீடம் அணிந்த வைரஸ்

பூனைக் குடும்பத்தில் பூனை, புலி என பல விலங்குகள் உள்ளதுபோல இந்த கொரோனா வைரஸ் குடும்பத்தில் மனிதர்களை தாக்கும் வைரஸ், பறவைகளைத் தாக்கும் வைரஸ், விலங்குகளைத் தாக்கும் வைரஸ் என பற்பல இனப்பிரிவுகள் உண்டு.

நுண்ணோக்கி வழியே பார்க்கும் போது கிரீடம் (கிறவுன்) போல அல்லது சூரியனை சுற்றி இருக்கும் ஒளிக் கதிர்கள் (கொரோனா) போல கூர்முனைகளைக் கொண்டு தென்படுவதால் கொரோனா வைரஸ் குடும்பம் என இதற்குப் பெயர் ஏற்பட்டது.

நமக்கு தெரிந்த வரையில், மனிதர்களை தாக்கும் ஆறு கொரோனா வைரஸ்களில் 229E, NL63, OC43, கூஹிலுO1 ஆகிய நான்கும் ஆபத்து அற்ற உடல் உபாதைகளை ஏற்படுத்தும். MERS - CoV மற்றும் SARS - CoV ஆகிய இரண்டும் கிருமி தாக்கியவர்களில் சிலருக்கு மரணம் சம்பவிக்கும் அளவுக்கு நோயை ஏற்படுத்தும்.

ஏழாவதாக உருவானதுதான் இந்த SARS - CoV - 2. எனவேதான், புத்தம் புதிதாக சமகாலத்தில் பரிணமித்த இனப்பிரிவு என பொருள்படும் 'நாவல்' என்ற அடைமொழியோடு 'நாவல் கொரோனா வைரஸ்' என பெயர் சூட்டப்பட்டது. இந்த வைரஸ் ஏற்படுத்தும் நோயின் பெயர் தான் கோவிட் – 19.

### பூட்டும் வைரஸ்களின் கள்ளசாவியும்

ஓம்புயிரிகளின் செல்களில் புகுந்து அந்த உயிரியின் செல் அமைப்பை பயன்படுத்தித்தான் வைரஸ்கள் இனப்பெருக்கம் செய்யும். எனவே எப்படியாவது ஓம்புயிரி செல்களுக்குள் செல்ல வைரஸ் துடிக்கும்.

ஓம்புயிரிகளின் செல்கள் தங்கள் கதவை திறந்து வைத்து வா வா என்று வைரஸ்களை அழைக்காது. செல் சுவர் கொண்டு வைரஸ்களை உள்ளே எளிதில் நுழைய முடியாமல் தடுத்து நிறுத்தும்.

ஆனால் கதவு பூட்டிய கோட்டை போல எல்லா நேரமும் செல்கள் இருந்து விட முடியாது. செல்பிரிதல், செல் செயல்படுதல் போன்ற எல்லா இயக்கத்துக்கும் ஆற்றல் தேவை. பற்பல புரத பொருள்கள் தேவை. ரத்தம் எடுத்து வரும் புரத பொருள்கள், ஆக்ஸிஜன் போன்ற பொருள்கள் செல்களுக்கு வெளியில் இருந்து உள்ளே செல்ல வேண்டும். உள்ளே ஏற்படும் வேதிவினை காரணமாக உருவாகும் மாசுகளை அப்புறப்படுத்த வேண்டும். எனவே, செல்களின் சுவர்களில் கதவு போன்ற அமைப்பு இருக்கும். தேவை ஏற்படும் போது மட்டும் கதவு திறந்து வெளியே உள்ள பொருள் உள்ளே வரும், உள்ளே உற்பத்தியாகும் மாசுகள் வெளியேற்றப்படும்.

சரியான புரதப்பொருள்கள் வந்து சேரும்போது, அவற்றை செல்களின் சுவர்களில் பற்றி பொறுத்துவதற்காக கைப்பிடி போன்ற ஏற்பிகள் இருக்கும். அந்த புரதங்களின் ஒரு பகுதி சாவியின் வடிவில் இருக்கும். செல் சுவற்றில் உள்ள கதவு பூட்டின் உள்ள இந்த சாவி வடிவம் நுழையும்போது கதவு திறந்து புரதம் உள்ளே செல்ல முடியும்.

பூட்டை உடைத்து திருடன் நுழைவது போல கள்ளச்சாவி போட்டு கதவை திறந்து வைரஸ்கள் உள்ளே நுழையும். ஒவ்வொரு பூட்டின் சாவியும் வெவ்வேறு வடிவில் இருக்கும் அல்லவா?

அதுபோல ஒவ்வொரு உயிரியின் பூட்டும் கைப்பிடியும் வெவ்வேறு வடிவில் இருக்கும். இதனால்தான், எல்லா வைரஸ்களும் எல்லா உயிரிகளின் செல்களிலும் புகுந்துவிட முடிவதில்லை. இதன் காரணமாகவே, மாட்டுக்கு நோய் ஏற்படுத்தும் வைரஸ்கள், பல சமயம் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுத்துவதில்லை.

அதாவது ஒவ்வொரு வைரஸுக்கும் அதற்கு ஏற்ற ஓம்புயிரிகள் உள்ளன. தனது ஓம்புயிரி செல்களை பற்றி, துளையிட்டு புகுந்து செல்வதற்காக அந்த குறிப்பிட்ட வைரஸ்களுக்கும் அதன் மேலுறையில் செல்களின் ஏற்பிகளை பற்றி பிடிக்கும் யூயம் புரதம் மற்றும் செல்சுவரின் கதவை திறக்கும் சாவி போன்ற அமைப்பு, புரதம் போன்ற சிறப்பு அமைப்புகள் இருக்கும்.

### மரபணு தொடர் வரிசை

தொற்றுநோய் பரவல் ஏற்பட சில நாள்களிலேயே சீன விஞ்ஞானிகள் SARS - CoV - 2 வைரஸின் மரபணு தொடரை வரிசை செய்து அனைத்து ஆய்வாளர்களும் ஆராய்ச்சி செய்யும் வண்ணம் பொதுவெளியில் வெளியிட்டனர். ஏற்கெனவே நடத்தப்பட்ட ஆய்வில், முதலில் ஒரே ஒரு மனிதருக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டு அதன் பின்னர் அவரிடமிருந்து மற்றவர்களுக்கு பரவிதான் சீனாவில் தொற்றுநோய் பரவல் ஏற்பட்டது என்பது விளங்கியது.

ஏறக்குறைய பந்து வடிவில் இருக்கும் கொரோனா வைரஸ்கள் மீது குறிப்பிட்ட புரதங்களால் ஆன கூர் முனைகள் உள்ளன. இந்த கூர் முனைகளைக் கொண்டே விலங்குகள் மற்றும் மனித செல்களை இந்த வைரஸ் பற்றிக் கொண்டு துளையிட்டு உள்ளே நுழைகிறது.

ஆண்டர்சன் மற்றும் அவரது சகப் பணியாளர்கள் SARS - CoV - 2 மரபணு தொடரை ஆராய்ந்தபோது, இந்த வகை வைரஸ்களின் கூர் முனைகளில் மனித செல்களின் மீது உள்ள ACE2 என்ற ஏற்பியை பற்றிக்கொள்ளும் விதத்தில் 'ஏற்பி பற்று' புரதம் பரிணமித்துள்ளது எனக் கண்டறிந்தனர். அதாவது புளீசி2 என்ற பூட்டைத் திறக்கும் சரியான சாவி SARS - CoV -2 – டம் இருந்தது.

### ஒப்பீடு ஆய்வு

இந்தச் சாவியை ஏனைய SARS - CoV வைரஸ்களின் சாவியோடு ஒப்பிட்டு பார்த்தனர். புதிதாக உருவான SARS - CoV 2 – ன் சாவி புரதம் ஏற்கெனவே SARS - CoV வைரஸ்களிடம் இருந்த சாவி புரதத்தைவிட ஆற்றல் குறைந்தது. செயற்கையாக உயிரியல் ஆயுதம் தயாரிக்க வேண்டும் என்றால் மேலும் ஆற்றல் கூடிய பற்று புரதத்தை தான் உருவாக்குவார்கள்; ஆற்றல் குறைவான ஒன்றை அல்ல.

ஒருவேளை, செயற்கை SARS - CoV - வைரஸை கிருமி யுத்தத்துக்கு தயார் செய்தால், அது ஏற்கனவே மனிதர்களை கொல்லும் மிகவும் கொடிய வகை வைரஸை அடிப்படையாக கொண்டு தான் அமைய வேண்டும். SARS - CoV 2 ன் அடிப்படை அமைப்பு ஏற்கெனவே மனிதரை தாக்கும் SARS - CoV வைரஸ்கள் போல இல்லாமல் அழுங்கு மற்றும் வவ்வால்களை தாக்கும் SARS - CoV வைரஸ்கள் போல அமைந்துள்ளது.

ஏற்கெனவே இருக்கும் கூர் கத்தியை மழுங்கடித்து போர் தளவாடங்களை தயார் செய்ய மாட்டார்கள் அல்லவா? அதன்படி பார்த்தால், SARS - CoV - வைரஸ்களின் வீரியம் கூட இந்த நாவல் SARS - CoV -2 வைரஸுக்கு இல்லை.

SARS - CoV -2 கூர்முனையின் யூயம் பற்று புரதம் மற்றும் வைரஸின் அடிப்படை மூலக்கூறு வடிவம் இரண்டையும் சேர்த்து பார்க்கும்போது, செயற்கையாக ஆய்வகத்தில் உருவாக்கிய கிருமியாக இருக்க முடியாது" – என ஆய்வாளர்கள் முடிவுக்கு வந்தார்கள்.

### எப்படி உருவானது?

இரண்டு வகையில் இந்த நாவல் SARS - CoV -2 வைரஸ் பரிணமித்து இருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். முதலாவதாக, வேறு விலங்குகளில் தொற்று ஏற்படுத்தும் வைரஸ் உருவாகி, பின்னர் மனிதர்களிடம் நோய் ஏற்படுத்தும் கிருமியாக பரிணமித்து பரவியிருக்கக் கூடும். இல்லையெனில், முதலில் நோயற்ற வடிவில் மனிதரிடம் பரவி, பின்னர் மனிதரிடம் பரிணமித்து நோய் ஏற்படுத்தும் கிருமியாக உருவாகியிருக்கலாம்.

வவ்வால்களிடம் பரவும் SARS - CoV - 2 வைரஸின் சாயல் இந்த கரோனா வைரஸில் காணப்படுகிறது. எனவே, வவ்வால்களிடமிருந்து மனிதர்களுக்கு இது பரவி இருக்கலாம் என ஒரு கருத்து உள்ளது. SARS மற்றும் னிசியூரீ வகை SARS - CoV கரோனா வைரஸ்கள் இப்படி தான் முதலில் புனுகு பூனை மற்றும் ஒட்டகங்களில் முறையே உருவாகி பின்னர் மனிதரிடம் பரவியது.

எனினும், வவ்வால்களிடம் நோய் ஏற்படுத்தும் அதே இனம், மனிதரிடம் நோய் ஏற்படுத்த முடியாது. எனவே இரண்டுக்கும் இடைப்பட்ட இனப்பிரிவு பரிணமித்து இருக்க வேண்டும். இது வரை அப்படிப்பட்ட இனப்பிரிவு இனம் காணப் படவில்லை. எனவே, வவ்வால்களிடம் உருவாகி மனிதனுக்கு இது பரவியது என தீர்மானமாகக் கூற முடியாது.

மாற்றாக நோய்விளைவிக்கின்ற திறன் அற்ற வகை வைரஸ் மனிதர்களிடம் பரவி, பின்னர் காலப் போக்கில் பரிணாமத்தின் காரணமாக, நோய் விளைவிக்கின்ற தன்மை கொண்ட இனப்பிரிவாக உருவெடுத்து இருக்கலாம். அழுங்கு, எறும்புண்ணிகளில் இந்த சாயல் கொண்ட வைரஸ் உள்ளது. அந்த விலங்கிடம் காணப்பட்ட வைரஸ்களிலும், SARS - CoV -2 வைரஸ்களிலும் ஒரே வகை யூயம் அமைப்புதான் உள்ளது.

எனவே நேரடியாக எறும்புண்ணியிடமிருந்தோ அல்லது பூனை இன விலங்குகளிடம் இருந்தோ இந்த வைரஸ் மனிதர்களிடம் பரவி இருக்கலாம். மனிதர்களிடம் பரவிய பின்னர், பரிணாம படிநிலை வளர்ச்சியில் மனித செல்களை துளைத்து திறக்கும் 'சாவி புரதம்' பரிணமித்து தொற்றுநோயாக உருவாகியிருக்கலாம் என்கிறார்கள்.

இரண்டில் எது சரி என்பதை இப்போது நம்மிடம் உள்ள தரவுகளைக் கொண்டு இறுதி செய்ய முடியாது. தொற்று விளைவிக்க கூடிய திறனோடு விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவியது என்றால் மறுபடி இந்த வைரஸின் வேறு ஒரு வடிவம் எதிர்காலத்தில் பரவி மீண்டும் தொற்றுநோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நோய் ஏற்படுத்தும் திறனற்ற வடிவில் மனிதர்களிடம் பரவி பின்னர், நோய் தன்மை கொண்ட வைரஸ் பரிணமித்துள்ளது என்றால் மறுபடியும் அதேபோன்ற நிகழ்வு ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவு.

எப்படி இந்த வைரஸ் உருவானது என்பதை கூடுதல் ஆய்வுதான் நமக்கு தெளிவுப்படுத்தும். *



# யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்கு 330 பேர் போட்டி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 20

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 330 பேர் போட்டியிடவுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் நேற்று வியாழக்கிழமை நண்பகலுடன் நிறைவடைந்தது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டயிடுவதற்காக 19 அரசியல் கட்சிகளும் 17 சுயேச்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

கிடைக்கப் பெற்ற வேட்பு மனுக்களின் மீது 24 ஆட்சேபனைகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. எனினும் ஆட்சேபனைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்த 19 அரசியல் கட்சிகளினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. கிடைக்கப் பெற்ற சுயேச்சைக் குழுக்களில் மூன்று சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

மொத்தமாக 19 அரசியல் கட்சிகளினதும் 14 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறாது என்றும் தேர்தல் திகதி எதிர்வரும் 25ஆம் திகதிக்குப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரூபாயின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி



கொழும்பு, மார்ச் 20

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சியடைந்து, 188.20 ரூபாயைத் தொட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி நாளுக்கு நாள் வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது.

இலங்பை மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றில் விற்பனைப் பெறுமதி, 187.23 ரூபாவாகக் காணப்பட்டது.

இந்த நிலையில் நேற்று 97 சதம் வீழ்ச்சியடைந்து 188.20 ரூபாவைத் தொட்டுள்ளது. (ஐ)

# இ.போ.ச. ஊழியர்களுக்கு இரண்டு நாள் விடுமுறை!




இலங்கைபோக்குவரத்துச்சபையின் அனைத்து ஊழியர்களுக்கும் நேற்றும், இன்றும் இரண்டு நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொதுப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவினை இலங்கை போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகம் அனைத்து சாலைகளுக்கும் வழங்கியுள்ளது.

பொதுப்போக்குவரத்தின் ஊடாக கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதனை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புத்தளம் உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று மாலை மீண்டும் ஊரடங்கு

புத்தளம் உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் ஊரடங்கு சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களுக்கு உட்பட்ட பொலிஸ் பிரிவுகளில் நேற்று முன்தினம் மாலை 04.30 மணி முதல் கால வரையறை அற்ற ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிலாபம், தங்கொட்டுவ, கொஸ்வத்த, மாதம்பே, மாரவில, வென்னப்புவ, ஆராச்சிகட்டு ஆகிய பிரதேசங்களிலும், நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட கொச்சிக்கடை பொலிஸ் பிரிவிலும் இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

அத்துடன், ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் அனைவரும் தமது வீடுகளுக்குள் இருப்பது அவசியம் என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் காலப்பகுதியில் தமது பயணங்களை கூடுமான வரையில் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளின் ஊடாக இடம்பெறும் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவை நடவடிக்கைகளுக்கும் இடையூறு இருக்காது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் நோக்கி பயணிப்போர், தமது விமானப் பயணச் சீட்டை ஊரடங்கு கால அனுமதிச் சீட்டாகப் பயன்படுத்த முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# ஊரடங்கு உத்தரவை மக்கள் மீறினால் கடும் நடவடிக்கை

புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பொலிஸ் எல்லை பிரதேசத்திற்குட்பட்ட சில பகுதிகளில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் சுற்றுலாக்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த பிரதேசத்தில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்கு சட்டம் குழப்ப நிலையின்போது பிறப்பிக்கப்படும் ஊரடங்கு சட்டம் அல்ல. மாறாக இது தொற்று நோய் தடுப்புச் சட்டத்துக்கு உட்பட்டதாகவே அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்கள் இதயபூர்வமாகச் சிந்தித்து செயற்படவேண்டிய தருணம் இது. இந்தப் பிரதேசங்களில் ஊரடங்கு சட்ட உத்தரவை மதிக்காது செயற்படுவோர் அதாவது மோட்டார் வாகனங்களைச் செலுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான வாகனங்கள் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்படும். இருப்பினும் இப் பிரதேசத்திற்கு ஊடாக யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், மன்னார் போன்ற மாவட்டங்களுக்கு வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். அவசர சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக பயணிக்க வேண்டாம்.

வேட்பு மனுக்கள் சமர்ப்பிப்பதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகள் ஆகியோர் இவ்வழியாக செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இவை தவிர இப் பிரதேசத்தில் உள்ளோர் வீடுகளிலேயே இருக்க வேண்டும். அதை விடுத்து ஒன்றுகூடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு இந்த விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்றார். (ஐ)

# சுற்றுலா செல்வோரைப் பிடிக்க சோதனைச் சாவடிகள் அமைப்பு

கொழும்பு, மார்ச் 20

அனைத்து பொலிஸ் நிலையப் பகுதிகளிலும் குறைந்தது 2 சோதனைச் சாவடிகளை அமைக்குமாறு பொலிஸ்மா அதிபர் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக சுற்றுலாப் பயணங்கள் போன்றவற்றுக்கான பஸ்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று பயணிகள் போக்குவரத்துப் பிரிவினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறிச் செயற்படும் பஸ்கள் மற்றும் வாகனங்கள் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்படும் .

இந்த பஸ்களுக்கான அனுமதிப் பத்திரங்களையும் சட்ட விதிகளுக்கு அமைவாக நிரந்தரமாக இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பயணிகள் விமானங்களுக்கான தடை நேற்று அமுலுக்கு வந்தது!

கொழும்பு, மார்ச் 20

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், பயணிகள் விமானங்கள் தரையிறங்குவதற்கு நேற்று அதிகாலை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹெஷான் சுமனசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வருகை தரும் அனைத்து விமானங்களுக்கும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்பவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பயண வழிமாற்ற விமானங்களுக்குத் தடை விதிக்கப்படாதபோதிலும், அந்த விமானப் பயணிகளுக்கு விமான நிலையத்திலிருந்து வெளியே செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (ஐ)





# ஐ.பி.எல். ஒப்பந்தங்களை துறக்கும் ஆஸி. வீரர்கள்?




கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலினால் ஆஸ்திரேலிய வீரர்கள் ஐ.பி.எல். ஒப்பந்தங்களைக் கூட துறக்க வாய்ப்பிருப்பதாக ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.பி.எல். போட்டிகள் ஏப்ரல் 15ஆம் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதன் பிறகும் நடக்குமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் கிரிக்கெட் ஆஸ்திரேலியா இது தொடர்பாக வீரர்களுக்கு எதுவும் அறிவுறுத்தவில்லை என்றாலும் அதன் தலைமைச் செயலதிகாரி கெவின் ரொபார்ட்ஸ் கூறும்போது வீரர்கள் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார்கள் எனவே இது தனிப்பட்ட வீரர்களின் முடிவைப் பொறுத்தது என்றார்.

நாங்கள் சின்ன அறிவுரைதான் வழங்க முடியும் முடிவு வீரர்களுடையதுதான். மேலும் இந்திய கிரிக்கெட் சபை மற்றும் அதன் ஐ.பி.எல். பிரிவுகளிலிருந்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே நிச்சயமற்ற இந்தச் சூழலில் வீரர்கள் சாத்தியமாகக் கூடிய நல்ல முடிவை எடுப்பார்கள் என்று கருதுகிறேன் என்றார் கெவின் ரொபார்ட்ஸ்.

ஆனால் ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று கிரிக்கெட் ஆஸ்திரேலியா வீரர்களை ஐ.பி.எல். அல்லது யுகேயின் ஹண்ட்ரட்ஸ் தொடருக்கு அனுமதிப்பது குறித்து மறு பரிசீலனை செய்து வருவதாக தெரிவிக்கிறது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பல்வேறு அணிகளில் மொத்தம் 17 ஆஸ்திரேலிய வீரர்கள் ஒப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அதிக தொகைக்கு ஒப்பந்திக்கப்பட்ட பாட் கமின்ஸ், உட்பட ஸ்டீவ் ஸ்மித், வோர்னர், மக்ஸ்வெல் ஆகியோர் தங்கள் பணம் கொழிக்கும் ஒப்பந்தங்களைக் கைவிட வாய்ப்புள்ளதாக அந்த ஊடகம் எழுதியுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றிலேயே 3.2 மில்லியன் டொலர்கள் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரே வீரர் கமின்ஸ்தான். இவரை கேகேஆர் ஏலம் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

# அமெ. ரெனிஸ் தொடர் ஒத்திவைக்கப்படுகிறதா?




ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர், ஒத்திவைக்க வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகின்றது.

சர்வதேச ரென்னிஸ் கூட்டமைப்பு, ஏடிபி, டபிள்யூ.டி.ஏ. ஆகியவற்றிடம் கலந்தாலோசனை நடத்திய பிறகே மாற்று திகதி குறித்து தெரிவிக்க முடியும் என்று அமெரிக்க ரென்னிஸ் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது, அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 13ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டுள்ளது.

ஆனால் தற்போது உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அனைத்து வகையான விளையாட்டு தொடர்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பாதுகாப்பு காரணமாக வீரர், வீராங்கனைகள் விளையாட்டு தொடர்களில் விளையாட தயக்கம் காட்டி வருகின்றனர்.

இதற்கிடையே முன்னதாக, ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடர் செப்டம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதற்கமைய இத்தொடர், செப்டம்பர் 20ஆம் திகதி முதல் ஒக்டோபர் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முன்னதாக பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடர் மே 24ஆம் திகதி முதல் ஜூன் 7ஆம் திகதி வரை நடைபெறுவதாக இருந்தது. பிரான்ஸில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகமாக இருப்பதால் பிரான்ஸ் ரென்னிஸ் கூட்டமைப்பு இந்த முடிவினை எடுத்துள்ளது.

இதனிடையே, ஆண்டின் மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடர் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வரும் நிலையிலும் தொடர் நடத்தும் முடிவில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 29ஆம் திகதி முதல் ஜூலை 12ஆம் திகதி வரை பிரித்தானியாவில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அலெக்ஸ் ஹேல்ஸுக்கு வைரஸ்?

கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் தன்னிடம் காணப்படுவதாக இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரரான அலெக்ஸ் ஹேல்ஸ் பாகிஸ்தானில் நடைபெற்று வந்த தொழில்முறை ரி20 கிரிக்கெட் தொடரில் பங்கேற்று விளையாடி வந்தார். கராச்சி கிங்ஸ் அணிக்காக விளையாடிவந்த அலெக்ஸ் ஹேல்ஸ் கடந்த சனிக்கிழமை திடீரென, பாகிஸ்தானில் இருந்து தாயகம் புறப்பட்டுச் சென்றார்.

இதற்கிடையே அலெக்ஸ் ஹேல்ஸுக்கு கோவிட் 19 வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் இருந்திருக்கலாம், அதனால் தான் அவர், பாகிஸ்தானில் இருந்து புறப்பட்டுச் சென்றிருக்கக்கூடும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் ரமீஸ் ராஜா கருத்து தெரிவித்திருந்தார். இது உலக கிரிக்கெட் வட்டாரத்திலும், சமூக வலைதளங்களிலும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இந்நிலையில் அலெக்ஸ் ஹேல்ஸ் தன்னிலை விளக்கம் ஒன்றை நேற்று தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். அதில், மற்ற வெளிநாட்டு வீரர்களை போலவே நானும் பாகிஸ்தான் சூப்பர் லீக் டி 20 தொடரில் இருந்து வெளியேறினேன். ஏனெனில் கோவிட் 19 வைரஸ் உலகம் முழுவதும் பரவி வருவதால் இந்த சூழ்நிலையில் ஆயி




ரக்கணக்கான மைல்கள் தள்ளி இருப்பதை விட குடும்பத்தினருடன் இருப்பதே முக்கியமானது என்பதை உணர்ந்தேன்.

கடந்த சனிக்கிழமை அதிகாலையில் நான் இங்கிலாந்து திரும்பினேன். அப்போது உடல் நிலை ஆரோக்கியமாக இருந்தது. வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் ஏதும் இல்லை. இருப்பினும் ஞாயிற்றுகிழமை எழுந்த போது காய்ச்சல் ஏற்பட்டது. தொடர்ந்து அரசின் வழிகாட்டுதல்களின் படி என்னை நானே தனிமைப்படுத்திக் கொண்டேன். இதன் தொடர்ச்சியாக வறண்ட மற்றும் தொடர்ச்சியான இருமல் உள்ளது.

தற்போதைய சூழலில் பரிசோதனை செய்யப்படுவதற்கு வாய்ப்பு இல்லை. இன்றைய நாளின் பிற்பகுதியில் சோதனைகள் மேற்கொள்ளப்படலாம். அப்போது தான் எனது உடல்நிலை குறித்துஉறுதியான தகவலை பெற முடியும் என தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், வறண்ட இருமல் ஆகியவை கோவிட் 19 வைரஸ் தொற்றின் அறிகுறிகளாக கருதப்படுகிறது. உலகம் முழுவதும் இந்த வைரஸ் தொற்றுக்கு இதுவரை 7 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் 1.70 இலட்சம் பேர் இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் வீரர்கள் எதிர்ப்பு!

ரோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடர் விவகாரத்தில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் முடிவுக்கு எதிராக, ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ள விளையாட்டு வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஒலிம்பிக் போட்டிகளை ஒத்திவைக்குமாறு உலகநாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

எனினும், நடப்பு ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை ஒத்திவைப்பது தொடர்பாக தற்போதைக்கு எந்த திட்டமும் இல்லை என சர்வதேச ஒலிம்பிக் குழு திட்டவட்டமாக கூறியுள்ளது.

இந்த நிலையில் கிரேக்க தடகள வீராங்கனை கதரீனா ஸ்டெஃபானிடி, பிரான்ஸைச் சேர்ந்த 110 மீ தடைதாண்டும் வீரரான பாஸ்கல் மார்டினோட் லகார்ட் போன்ற வீரர்கள் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கதரீனா ஸ்டெபானிடி தனது சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், 'சர்வதேச ஒலிம்பிக் குழு வீரர்களின் உடல்நலத்தில் அக்கறை செலுத்த மறுக்கிறது. குழுப் போட்டிகளில் பல நாடுகளைச் சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் ஒன்றாக பங்கேற்க வேண்டியிருக்கும்.

ஜிம்னாஸ்டிக்ஸ் போன்ற விளையாட்டுகளில் பலர் தொடக்கூடிய பொருள்களை தொட வேண்டியதிருக்கும். இதை ஒலிம்பிக் குழு கவனத்தில் கொள்ள வேண்டும்' என குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல, பாஸ்கல் மார்டினோட் லகார்ட் கூறுகையில்– 'ஒலிம்பிக் போட்டியை ஒத்திவைப்பதே சிறந்த முடிவாக இருக்கும். ஒரு சில நாடுகள் கரோனா வைரஸால் அதிகமாகவும், ஒரு சில நாடுகள் குறைவாகவும் பாதிக்கப்பட்டுள்ள. சில நாடுகளில் பயிற்சி எடுக்க மைதானங்கள் கிடைப்பதில்லை. அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. ஆண்டு இறுதி வரை ஒலிம்பிக் ஒத்திவைக்கப்பட்டால் நல்லது' என கூறியுள்ளார்.

இதனிடையே, கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்




எழுந்துள்ள அசாதாரணமான சூழலில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான தீர்வைக் காண வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து சர்வதேச ஒலிம்பிக் குழு செய்தித்தொடர்பாளர் கூறுகையில், 'போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் உடல்நலத்தில் அக்கறை கொண்டிருக்கிறோம். அதேநேரம், ஒலிம்பிக் போட்டியையும் திட்டமிட்டபடி நடத்த வேண்டிய சூழலில் உள்ளோம்' என கூறினார்.

# அரச, தனியார் உத்தியோகத்தர்களை வீடுகளிலிருந்து பணியாற்றப் பணிப்பு

கொழும்பு, மார்ச் 20

இன்று முதல் 27 வரையான காலப் பகுதி அரச, தனியார் துறைகளுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் வாரமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை வெளியாகியுள்ளது.

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணப் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

இலங்கையில் கோரோனா தொற்று நோய் தீவிரமாகப் பரவும் நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் பணியாற்றுவது அரச மற்றும் தனியார்த் துறையினர் மட்டுமன்றி பொதுமக்களினதும் பொறுப்பாகும்.

இதுவரை காலப்பகுதியிலும் அரசு இது தொடர்பான நடவடிக்கைககளை மேற்கொண்டிருக்கின்றது.

மக்களுக்கான சேவையை தொடர்ச்சியாக வழங்குவது அரசின் கடமையாக இருப்பதுடன் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசமைப்புக்குட்பட்ட அனைத்து நிறுவனங்களும் தொலைத்தொடர்பு முறையை பயன்படுத்தி 2020.03.20 – 2020.03.27 வரை கடமையாற்ற எதிர்ப்பார்க்கப்பட்டிருப்பதுடன், எதிர்காலத்தில் இம்முறையினூடாக சில நிறுவனங்களை தெரிவு செய்து சேவை வழங்கவும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்தக் காலப் பகுதிகள் அரச விடுமுறைத் தினங்களாக கொள்ளப்படாதமையுடன் 2020.03.21 மற்றும் 2020.03.22 ஆகிய தினங்களே சாதாரண விடுமுறை தினங்களாகக் கொள்ளப்படும்.

மேலும் மக்கள் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்த அவசியமான சுகாதாரம், உள்ளூராட்சி, போக்குவரத்து, வங்கி, உணவு, நீர், மினசாரம் ஆகிய வசதிகளைப்போன்றே, உரம் பகிர்ந்தளித்தல், நெல் விற்பனை செய்தல் ஆகிய பொருள்கள் மற்றும் சேவை வழங்கல் ஆகியன குறித்த பொறுப்புடைய உத்தியோகத்தர்காளால் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

அதுபோன்றே மாவட்ட, பிரதேச செயலகங்கள் தமது கடமைகளை தொடர்ச்சியாக வழங்கவேண்டும்.

மேற்கூறியவாறு தொலைத்தொடர்பு வசதிகளைப் பயன்டுத்துவதில் குறித்த திணைக்களங்களின் தலைவர்கள் தங்களது உத்தியோகத்தர்களை இயன்றளவு அலுவலகத்திற்கு அழைக்காது, இமெயில், எஸ்.எம்.எஸ்., தொலைபேசி போன்ற தொழிநுட்ப முறைகள் மற்றும் கடிதக் கோவைகளை வரவழைத்தல் போன்ற உத்திகளை பயன்படுத்தி தொடர்ச்சியான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேலும், மக்களை அலுவலகத்திற்கு ஒன்றுசேர்ப்பதனை தவிர்த்து மக்களுக்கான சேவையைச் சரியான முறையில் மேற்கொள்ள வேண்டி இருப்பதனால் அந்தச் சேவைகளைத் தொலைபேசி, ஈ மெயில் ஆகிய முறைகளினூடாக நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இதன்போது தமது தனிப்பட்ட தொலைபேசியைப் பயன்படுத்தப்படின், அதற்கான கொடுப்பனவுகள் அரசினால் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான மனிதாபிமான புரட்சியில் அனைத்து நிறுவனங்களும் தமது தொடர்ச்சியான சேவையை வழங்கும் என எதிர்ப்பார்ப்பதுடன், கொரோனா வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதனை முக்கிய நோக்காக கொண்டு, ஒவ்வொரு நிறுவனங்களாலும் வழங்கப்படும் சேவைகள் ஒன்றிலிருந்தொன்று வேறுபடுவதனால், உத்தியோகத்தர் குழாத்திற்கு அறிவூட்டி, உத்தியோகத்தர் குழாத்தை மட்டுபடுத்தி சேவை வழங்குவது திணைக்கள தலைவர்களின் பொறுப்பாகும்.

தனியார் துறைக்கும் தமது விற்பனை நடவடிக்கைகளை மேற்கூறப்பட்ட முறைக்கமைவாக மேற்கொள்ள வணிக சங்கங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது – என்றுள்ளது.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS
DS NO - 882

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# யாழ். நகரில் உள்ள கடைகள் பி.ப. 3 மணியுடன் மூடப்படும்

## கொரோனா தாக்கத்தை தடுக்க முன்னேற்பாடு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 20

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ். நகர வர்த்தக நிலையங்களை பிற்பகல் 3 மணியுடன் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய நேற்று வியாழக்கிழமை நடந்த யாழ் வணிகர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் தாக்கத்தினால் ஏற்பட்டிருக்கும் அவசர நிலையைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் சில அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

1. அத்தியாவசியத் தேவையான உணவகங்கள், மருந்தகங்கள், பலசரக்கு வியாபார நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களை கொரோனா வைரஸினால் ஏற்பட்டுள்ள அவசர நிலையை கருத்தில் கொண்டு பிற்பகல் 3.00 மணியுடன் பூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. வர்த்தக நிலையங்களுக்கு வரும் பொதுமக்கள் தங்களின் அவசர தேவைக்காக மட்டும் ஓரிருவர் வந்து பொருள்களை கொள்வனவு செய்தல் சிறந்தது.

குடும்பத்துடனோ கூட்டமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும்.

3. கொரோனா வைரஸிடமிருந்து தங்களைப் பாதுகாத்து கொள்ள சுகாதார அமைச்சு வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக தண்ணீரில் சவர்க்காரமிட்டு கைகளை அடிக்கடி கழுவுதல், இருமல் அல்லது தும்மல் ஏற்படும் போது உங்கள் வாய் மற்றும் மூக்கை கைகுட்டையால் மூடுதல், உடல்நிலை சரியில்லாத நபர்களுடன் பழகுவதை தவிர்த்தல், மக்கள் கூடுதலாக ஒன்று கூடும் இடங்களை தவிர்த்தல், கைகள் சுத்தமாக இல்லா விட்டால் கண்கள், மூக்கு, வாய், அலது முகத்தை தொடாதிருத்தல், ஒவ்வொரு நபரிடமிருந்தும் முடிந்த வரை ஒரு மீற்றர் தொலைவில் இருந்து உரையாடுதல், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க விற்றமின் சீ, நோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் உணவு முறைகளை பின்பற்றுதல், ஏதாவது நோய் அறிகுறி இருப்பின் உடன் வைத்தியசாலையை நாடுதல் போன்ற ஆலோசனைகளை பின்பற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

4. வர்த்தக நிலையங்களுக்கு வயது முதிர்ந்தவர்கள், சிறுவர்கள் வருவதனைத் தவிர்க்குமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

5. வர்த்தக கொள்வனவிற்காக வரும் பொதுமக்கள் நெருக்கமாக இருப்பதை தவிர்ப்பதுடன் தமக்கிடையில் ஒரு இடைவெளியைப் பேணுமாறும் கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

6. அத்தியாவசியத்தேவையுடையோர் தவிர்ந்த ஏனையோர் வீட்டை விட்டு வெள்யே வருவதை தவிர்த்தல் வேண்டும்.

7. வர்த்தக நிலையக் கதவின் கைபிடிகள் உட்பட வர்த்தக நிலையங்களை கிருமியகற்றும் பதார்த்தங்களை பயன்படுத்தி அடிக்கடி சுத்தபடுத்தி அதிஉச்ச சுகாதாரத்தினை பேணுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இவ்வொழுங்குகளை யாழ் வணிகர் கழகம் தீர்மானம் எடுத்து தமது உறுப்பினர்களுக்கு உடனடியாக கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கோரோனா வந்த கதைகூறு!



- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

உலகழிக்க ஆயுதங்கள் உவப்போடு செய்தவர்கள்
நிலமனைத்தும் அவை விதைத்து நிமிர்ந்தார்கள் – தளமதனில்
ஓர் கிருமி உள்நுழைய ஒளிந்தோடித் திரிகின்றார்
வேரறுக்கத் தெரியாமல் வெருண்டு.

தொட்டால் வருமாம் தும்மப் பிடித்திடுமாம்
எட்டாத இடமெல்லாம் எட்டிடுமாம் – விட்டால்
ஊரை அழிக்குமென ஒப்பாரி வைக்கின்றார்
போரை வளர்த்திட்ட புல்லர்.

இறக்குமதிதான் எங்கள் ஏற்றமென உரைத்தவர்கள்
வரக்கிருமி தனைக் கண்டே வருந்துகிறார் – தரக்குறைவால்
நாட்டை அழித்திடவே நாசவழி சமைத்தவர்கள்
மாட்டினராம் வைரஸின் மாண்பில்.

சா அறுக்கவேண்டிச் சதிராடித் திரிந்தவர்கள்
பேருரைக்க நடுங்குகிறார் பேதலித்து – ஊருலகில்
கொரோனா வந்து குதித்ததனால் மரணமதின்
சீரான வேதனையைத் தெரிந்து.

கைகூப்பும் தமிழ் வணக்கம் கடைத்தொழிலாம் என்றவர்கள்
மெய் கூசி மேனியெலாம் விதிர்விதிர்த்தார் – வையமெலாம்
இருகைதனைக் கூப்பி ஏற்றமுற வணங்குகிறார்
வருகைதர வைரஸால் வருந்தி.

இயற்கையதை வென்றிடவே எத்தனையோ செயல் புரிந்து
மயக்கமதால் முயன்றிட்ட மானுடர்கள் – பயத்துடனே
சின்னக் கிருமியது சீறித்தான் பாய்ந்திடவே
எண்ணத்தால் சோர்ந்தார்கள் இழிந்து.

ஏவுகணை செய்தே நாம் இருந்துலகை அழிப்பம் என
பூவுலகம் நடுங்கத்தான் புகன்றவர்கள் – மேவி ஒரு
வைரஸ் அது வெருட்ட வாடித்தான் நடுநடுங்கி
கையறுந்த நிலையுற்றுக் கவன்றார்.

வல்லார்க்கு வல்லார்கள் வையகத்தில் உண்டென்னும்
நல்லார்தம் பழம் வார்த்தை நயமுறவே – எல்லோர்க்கும்
பாடமாய் கோரோனா பாரதனில் வந்ததுவாம்
நாடசைத்து நிற்கிறதே நலித்து.

தாரானா எனக் கையைத் தாழ்த்தியதால் தேசமதின்
சீரான பெரும்புகழைச் சிதைத்தார்கள் – வேரோட
வாரானா என ஏங்கி வரவேற்ற சீனர்களால்
கோரோனா வந்த கதைகூறு!

## தனிமைப்படுத்தப்பட்ட பெண் ஒருவர் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் பரவி வருவதையடுத்து, வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட முதலாவது பெண் ஒருவர், நேற்று முன்தினம் சமூகமயமாக்கப்பட்டுள்ளாரென சுகாதார வைத்திய அதிகாரி உபுல் ஜயதிலக்க தெரிவித்தார்.

இத்தாலியிலிருந்து வருகைதந்த குறித்த பெண்ணே 14 தினங்கள் அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டமையுடன், நாத்தண் டிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அந்தப் பெண்ணைக் கண்காணித்து வந்துள்ளது.

இந்தப்பெண்வைத்தியப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளார் என்பதுடன், அந்தப் பெண்ணுக்கு விசேட சான்றிதழ் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்ட மேலும் பலர் எதிர்வரும் தினங்களில் சமூத்துடன் இணைப்படுவாரென நாத்தண்டிய சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

நாத்தாண்டிய பகுதியில் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய 65 பேரை 14 தினங்கள்வரை வெளியில்நடமாட வேண்டாமென மாரவில மாவட்ட நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண், பல் வைத்தியசாலைகளில் இன்று முதல் அவசர சிகிச்சையே

கொழும்பு, மார்ச் 20

கொழும்பில் உள்ள கண் மற்றும் பல் வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகள் மாத்திரமே முன்னெடுக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய அதிகாரி அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை நாளை முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தார்.

கொவிட் 19 என்றழைக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 59ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடவுளது பிரார்த்தனையை கருத்துடனே செய்திடுவோம்!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

அறிவித்தல் வரும்வரைக்கும்
அணைத்துமுத்தம் தடுத்திடுவோம்
ஆரையுமே தலைதொட்டு
ஆசிகூறல் தவிர்த்திடுவோம்
கைகொடுத்து நிற்காமல்
கைகூப்பி நின்றிடுவோம்
காலனான கொரனோவை
காணுவதைத் தவிர்த்திடுவோம்!

கூழைக் குடித்தாலும்
குளித்துவிட்டு குடியென்போம்
கந்தையே ஆனாலும்
கசக்கியே கட்டுவென்போம்
சுத்தமதை வாழ்வாக்கி
வாழ்ந்துவரல் யாவருக்கும்
நித்தமுமே தேவையென
மொத்தமுமே எண்ணுகிறார்!

வெளியிடத்தில் உண்ணுவதை
விரும்புவதை ஒதுக்கிடுவோம்
உளமகிழ நண்பருடன்
உலாபோதல் தவிர்த்திடுவோம்
வெறுமையென நினைத்தாலும்
தனிமைதனை தேர்ந்தெடுப்போம்
கொரனோவை விரட்டுவென
முறையிடுவோம் இறையிடமே!

கைகழுவி கால்கழுவி
வீட்டுக்குள் நுழைந்திடுவோம்
களியாட்ட விழாவனைத்தும்
கட்டாயம் நிறுத்திடுவோம்
கடுந்துயராம் கொரனோவை
காணாமல் செய்கவென
கடவுளது பிரார்த்தனையை
கருத்துடனே செய்திடுவோம்!

# மட்டக்களப்பில் பெரும் தீ விபத்து

## பல கடைகள் தீக்கிரை









மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு கல்லடியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று மாலை ஏற்பட்ட தீ காரணமாக மூன்று வர்த்தக நிலையங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட தீ காரணமாக மூன்று வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்துள்ளன. ஹாட்வெயர் கடை ஒன்றிலேயே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவுத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையை முன்னெடுத்தது.

இதன்போது, மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் கலகம் அடக்கும் பகுதியில் சேவையில் ஈடுபடுத்தும் நீர் அடிக்கும் வாகனமும் தீயினைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தது.

மட்டக்களப்பு, மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்களும் நேரடியாகச் சென்று தீயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

இந்தத் தீ ஏற்பட்டமைக்கான காரணம் தெரியாத நிலையில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# ரயில்களில் தொற்று நீக்கல்



கொழும்பு, மார்ச் 20

நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், உரிய தொற்றுநீக்கல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக ரயில் சேவைகள் திணைக்களம் தெரிவித்திருக்கிறது.

முழு நாட்டையும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக முப்படையினர் மற்றும் பொலிஸாரால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, அவற்றுக்கு ஒத்துழைப்பை வழங்கும் விதமாக ரயில் சேவைகள் திணைக் களத்தினாலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் ரயில் சேவைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# 8,000 வெளிநாட்டவர்களை திருப்பியனுப்ப நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 20

இலங்கையில், தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை, மீள அவர்களது நாடுகளுக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் சுமார் 38,000 வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கின்றனர் எனவும் அவர்களை, அவர்களின் சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கான நட வடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வுள்ளன எனவும் அரசு அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவலையடுத்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இன்று 7 பேர் புதிதாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் மொத்தமாக 59 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2020 இல் வெளியிடப்பெற்றது.